Follow us:

# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 164 சுபகிருது வருடம், தை மாதம் 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (07.02.2023) ஹிஜ்ரி 1444, ஜமா அதுல் ரஜப் - 15, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50








# துருக்கி பூகம்பத்தில் ஆயிரக்கணக்கானோர் பலி!

## அதிகாலை நித்திரையின்போது சோகம்

## ஆறாயிரம் பேருக்கு அதிகமானோர் காயம்

## மேலும் பலர் புதையுண்டிருக்கலாமென அச்சம்








10 பக்கம்

## ஜனாதிபதியின் அக்கிராசன உரை நாளை நாடாளுமன்றில்!

### பல்வேறு தரப்பினரும் போராட்டத்துக்கு ஆயத்தம்; வைத்தியசாலைகள் முடங்கும் சாத்தியம்

*நா. தினுஷா*

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அக்கிராசன உரை நாளை (08) பாராளுமன்றத்தில் இடம்பெறவுள்ள நிலையில், பல்வேறு கோரிக்கைகள் மற்றும் எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில், அரசியல் கட்சிகள், பிக்குகள், சிவில் அமைப்புகள் என பல்வேறு தரப்பினர் கொழும்பில்....

» 02 பக்கம்

## இலங்கையர் தொடர்பில் விசேட அவதானம்

துருக்கியிலுள்ள இலங்கையர்கள் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதியில் இருப்பதாக நம்பப்படும் ஒன்பது இலங்கையர்களும் பாதுகாப்பாக இருப்பதாகவும்..

» 02 பக்கம்

## மஹிந்தவுடனான கூட்டறிக்கையை பான் கி மூன் நினைவூட்ட வேண்டும்

### கண்டால் நேருக்கு நேர் கேட்கவுள்ளதாக கூறுகிறார் மனோ எம்.பி.



இலங்கை வந்துள்ள முன்னாள் ஐ.நா. செயலாளர் பான் கி மூன், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை கட்டாயம் சந்தித்து தான் கடைசியாக போர் முடிந்த சில நாட்களில் இலங்கை வந்து, தமிழினம் எதிர்கொண்ட பேரழிவுகளை பார்த்துவிட்டு, ஊர் திரும்பும்போது பேச்சுகள் நடத்தி,

02 பக்கம்

## பான் கி மூன் நேற்று வருகை



02 பக்கம்

## இலங்கை செப்டெம்பரில் கடனை மீள செலுத்தும்

### பங்களாதேஷ் வெளிவிவகார அமைச்சர் நம்பிக்கை



இலங்கைக்கு பங்களாதேஷ் வழங்கிய கடன் தொகை இவ்வருடம் செப்டெம்பர் மாதத்துக்கு முன்பதாக மீள கிடைக்குமென எதிர்பார்ப்பதாக அந்நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது.

இலங்கையின் நிலைமை படிப்படியாக சீரடைந்து வருவதால் கடன் மீளக் கிடைக்குமென எதிர்பார்ப்பதாக பங்களாதேஷ் வெளியுறவுத்துறை அமைச்சர் ஏ.கே.அப்துல் மொமன் தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷ் வெளிவிவகார அமைச்சர் மொமன்,

» 02 பக்கம்

## நீர்வெறுப்பு நோய் தடுப்பூசிகளுக்கு கடும் தட்டுப்பாடு

### மரணங்கள் அதிகரிக்கலாமென சுகாதாரத்துறை எச்சரிக்கை

*நா. தினுஷா*

நீர்வெறுப்பு நோய்க்கான தடுப்பூசிகளுக்கு நாட்டில் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. கடந்த சில மாதங்களாக நாய்களுக்கு தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்படவில்லை. அதன் காரணமாக எதிர்காலத்தில் நீர்வெறுப்பு நோயினால் ஏற்படக்கூடிய மரணங்கள் அதிகரிக்கலாமென பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

02 பக்கம்

## லாவ்ஸ் எரிவாயு விலையும் உயர்வு




லாவ்ஸ் எரிவாயு நிறுவனம், நேற்று (06) முதல் எரிவாயு சிலிண்டர்களின் விலைகளை அதிகரிப்பதாக அறிவித்துள்ளது. அதன் பிரகாரம் 12.5 கிலோ கிராம் எடையுடைய எரிவாயு சிலிண்டரின் விலை 200 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

02 பக்கம்

## தேர்தலுக்கு நிதி ஒதுக்குவது இலகுவான காரியம் அல்ல!

### அரசாங்கம் அறிவிப்பு

நாட்டைக் கட்டியெழுப்ப பொருளாதார முகாமைத்துவம் செய்துகொண்டுவரும் நிலையில், தேர்தலுக்காக 10 பில்லியன் ரூபாவை செலவிடுவது இலகுவான காரியமல்லவென நகர அபிவிருத்தி வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அதனால் தேர்தலை நடத்துவதா, இல்லையா என்பதை நீதிமன்றமே....

» 02 பக்கம்



## தலிபான்களைப்போல ஜனாதிபதியின் ஆட்சி

### சாடுகிறார் டலஸ் எம்.பி.

*நா. தினுஷா*

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தலிபான்களைப்போன்றே ஆட்சிசெய்துவருவதுடன், மறுபுறம் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஒத்துழைப்புடன் மக்களின் இறைமையை சமூக துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தி வருகிறார். எனவே, அரசாங்கம் நாட்டின் அழிவை பொழுது போக்காக...

» 02 பக்கம்

## சகல அரச சேவைகளும் பெப். 20இல் முடங்கும்

### தொழிற்சங்கங்கள் சூளுரை

*நா. தினுஷா*

வங்கிக் கடன் வட்டி அதிகரிப்புக்கு அரசாங்கம் விரைவாக தீர்வை பெற்றுக்கொடுக்காவிட்டால் எதிர்வரும் 20ஆம் திகதி சகல அரச சேவைகளும் முடங்கும் என்றும் அன்று பாரிய தொழிற்சங்க நடவடிக்கையொன்று முன்னெடுக்கப்படுமென்றும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் தொழிற்சங்கங்கள் அறிவித்திருக்கின்றன.

நேற்று நீதி அமைச்சின் செயலாளரை சந்தித்துக் கடிதமொன்றை சமர்ப்பித்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போது இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் இதனைத் தெரிவித்தார்.

» 02 பக்கம்

# நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு ஐ.நா. இலங்கைக்கு ஆதரவு

நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு இலங்கைக்கு ஆதரவளிப்பதாக ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

வரவு - செலவுத் திட்டத்தில் நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளை சேர்ப்பது தொடர்பாக ஜனாதிபதி அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர்கள் மேற்படி குறிப்பிட்டனர்.

காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜயவர்தன மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் நிலைபேண்தகு பொருளாதாரம் தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் பேராசிரியர் ஆனந்த மலவிதந்திரி ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதிநிதிகளாக அதன் வதிவிடப் பிரதிநிதி அசூஸா குபோட்டா, வரவு - செலவுத் திட்ட ஆலோசகர் ஆசிவ் ஷாஹ், ஒருங்கிணைப்பு நிபுணர் துலானி சிறிசேன, கொள்கை, ஆராய்ச்சி மற்றும், இணைப்பு உதவியாளர் அப்ரா மொஹமட் ஆகியோர் பங்குபற்றினர்.

நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளை, பொது நிதி முகாமைத்துவ முறைமைகளுடன் ஒருங்கிணைப்பது தொடர்பில் இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன் அபிவிருத்தி இலக்குகள் மற்றும் வரவு - செலவுத் திட்டத்தின் முக்கிய நன்மைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

வரவு - செலவுத் திட்ட இடைவெளிகளைக் குறைப்பதற்காக புதுப்பிக்கப்பட்ட தரவுகளுடன் கூடிய பயனுள்ள அடிப்படையை வழங்குதல், சமூகத் துறையுடன் தொடர்புடைய செலவினங்களைப் பாதுகாப்பதற்காக மிகச் சிறந்த வழிமுறைகளை அறிமுகப்படுத்தல், நிதி இடைவெளிகளைக் கண்டறிந்து, அவற்றைக் குறைப்பதற்கான வழிமுறைகளில் கவனம் செலுத்தல், கொள்கை ஒருங்கிணைப்பை மேம்படுத்தல் மற்றும் பொது முதலீடுகளில் உள்ள பணத்திற்கு அதிக மதிப்பைப் பெற உதவுதல், நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்காக பொது நிதி ஒதுக்கீடுகளில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்தல், வளங்களைத் திரட்டுதல் மற்றும் நிலையான வளர்ச்சிக்கென முறையான திட்டமிடலை வழங்குவதன் மூலம் அரசாங்க நடவடிக்கைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல், இலக்குகள்/காலநிலை/பாலின அடிப்படையிலான வரவு - செலவுத் திட்ட இலக்குகள் மூலம் வருடாந்த வரவு - செலவுத் திட்டத்தில் முன்னுரிமை வழங்க வேண்டிய விடயங்கள் குறித்தும் இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டன.

அத்துடன் இதனால் ஏற்படக்கூடிய நடைமுறைச் சிக்கல்கள் மற்றும் அந்தச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கான வழிமுறைகள் தொடர்பிலும் ஆராயப்பட்டன.

இந்நிகழ்வில் நிலைபேண்தகு அபிவிருத்திச் சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பணிப்பாளர் நாயகம் சமிந்திரி சபரமாது மற்றும் உதவிப் பணிப்பாளர் நதீகா அமரசிங்க, ஜனாதிபதியின் ஒருங்கிணைப்புச் செயலாளர் ராஜித அபேகுணசேகர மற்றும் பணிப்பாளர் சஜன சூரியாரச்சி ஆகியோர் கலந்துகொண்டனர்.

# எனக்கு எதிராக பேசுபவர்களின் பின்னணியில் வேறு குழுவினர்

## எதற்கும் அஞ்சமாட்டேன் என்கிறார் மைத்ரி

என்னை கொல்லாமல் கொல்கிறார்கள். ஆனால், நான் யாருக்கும் எதற்காகவுமே பயங்கொள்ளவேண்டிய அவசியமில்லை. என்னைப்பற்றி பேசுபவர்களின் பின்னணியில் வேறு குழுவினர்கள் இயங்குகிறார்கள். அவர்களே எனக்கு எதிரான செயற்பாடுகளை வழிநடத்துகிறார்கள். சுதந்திரக் கட்சிக்கு இருக்கும் கொள்கைகள் மற்றும் விசேடமாக எனக்கிருக்கும் சர்வதேச தொடர்புகளினாலேயே இவ்வாறு என்னையும் எனது கட்சியையும் அழிப்பதற்கு முயற்சிக்கிறார்கள் என்று முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்ரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் கம்பஹா மாவட்ட வேட்பாளர்களுக்கு உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலான சந்திப்பொன்று கம்பஹாவில் இடம்பெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு குறிப்பட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், நான் எதற்கு பயங்கொள்ள வேண்டும். யாருக்கு பயங்கொள்ள வேண்டும். யாருக்கும் எதற்காகவுமே பயங்கொள்ளவேண்டிய அவசியமில்லை. நெல்சன் மண்டேலா 27 வருடங்கள் சிறைத் தண்டனை அனுபவித்தார். இன்று என்னை கொல்லாமல் கொல்கிறார்கள். என்னைப்பற்றி பேசுபவர்களின் பின்னணியில் வேறு குழுவினர் இருக்கிறார்கள். அவர்களே இதனை வழிநடத்துகிறார்கள்.

என்னுடன் இருக்கும் தனிப் பிரச்சினைகளுக்காக அவர்கள் இந்த வழிநடத்தல்களை முன்னெடுக்கவில்லை. சுதந்திரக் கட்சிக்கு இருக்கும் கொள்கைகள் மற்றும் விசேடமாக எனக்கிருக்கும் சர்வதேச தொடர்புகளினாலேயே என்னையும் எனது கட்சியையும் அழிப்பதற்கு முயற்சிக்கிறார்கள்.

உயர் நீதிமன்றம் என்னை அழைத்திருந்தது. அதன் பின்னர் நானும் ஆஜராகியிருந்தேன். ஆனால், அடுத்தநாள் பத்திரிகைகள் உள்ளிட்ட சகல ஊடகங்களிலும் நீதியரசர் என்னை எச்சரித்ததாக செய்திகள் வெளியிடப்பட்டிருந்தன. நீதியரசர் எனக்கு எந்த எச்சரிக்கையும் வழங்கவில்லை. நாங்கள் நீதிமன்றத்தையும் சட்டத்தையும் மதிக்கிறோம். இது நீதிமன்ற பிரச்சினையில்லை. உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் சூழ்ச்சிகளே தற்போது இடம்பெறுகின்றன என்றார்.

# பரீட்சைகளின்போது மின்வெட்டை தடுக்கும் மனுவை விசாரணைக்கு ஏற்றது நீதிமன்றம்

தேசிய பரீட்சைகளின்போது மின்வெட்டை தடுக்கும் வகையில் இலங்கை மின்சார சபை மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி இலங்கை ஆசிரியர் சங்கம் தாக்கல் செய்த அடிப்படை மனித உரிமை மனுவை எதிர்வரும் ஜூலை மாதம் 14ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பிரியந்த ஜயவர்தன, அச்சல வெங்கப்புலி மற்றும் மஹிந்த சமயவர்தன ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற நீதிபதிகள் முன்னிலையில் இந்த மனு நேற்று(06) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த மனுவை ஜூலை 14ஆம் திகதி பரிசீலிக்க தீர்மானித்துள்ளது.

குறித்த மனுவில் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு அழைப்பாணை அனுப்பவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

## சகல அரச...

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் வங்கிகளில் கடன்களைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். வங்கிகளால் முன்வைக்கப்பட்ட கடன் திட்டங்களுக்கும் வட்டி வீதங்களுக்கும் அமையவே இந்த கடன்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. கடன் பெற்றுக்கொள்ளப்பட்டபோது 9 சதவீதமாக இருந்த வட்டி வீதம் இன்று 15 சதவீதமாகியுள்ளது. இந்த நிலைமையில் எவ்வாறு இதனை மீள செலுத்துவது?

கடன் திட்டத்துக்கு செலுத்தி மிகுதியாகும் பணமே வாழ்வாதார நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றது. மறுபுறம் ஒரு இலட்சம் ரூபாவுக்கு அதிகளவு சம்பளம் பெறுபவர்களிடம் வரி அறவிடப்படுகின்றது. வரியும், வட்டியும் இவ்வாறு அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் எவ்வாறு உயிர்வாழ்வது என்ற பிரச்சினையும் தோற்றம்பெறுகிறது.

தமது நிலைத்திருப்புக்காக மக்களை சுரண்டியாவது வாழ்வதே ரணில் - ராஜபக்ஷக்கள் அரசாங்கத்தின் நோக்கமாக இருக்கிறது. பொருட்களின் விலை அதிகரிப்பு, போக்குவரத்துச் செலவு அதிகரிப்பு, மருந்துகளுக்கு தட்டுப்பாடு என பல்வேறு பிரச்சினைகளும் எழுந்திருக்கின்றன.

அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் தொழிற்சங்க தலைவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து நிதி அமைச்சின் செயலாளரிடம் கடிதமொன்றை சமர்ப்பிக்க தீர்மானித்திருந்தோம். நடந்துச் சென்று அந்த கடிதத்தை சமர்ப்பிக்கவே நாங்கள் தீர்மானித்திருந்தோம். ஆனால், பொலிஸார் எங்களுக்கு அனுமதி வழங்கவில்லை. ஜனாதிபதி செயலகத்தை அண்மித்துள்ள சகல வீதிகளிலும் எங்களை வழிமறித்து செல்லவிடாமல் தடைவிதித்தார்கள்.

எங்களின் உரிமைகளை மறுக்க யாராலும் முடியாது. மக்களை வாழச் செய்ய முடியாவிட்டால் அரசாங்கம் வெளியேற வேண்டும். அதனை செய்யாமல் மக்களை அச்சுறுத்தி அடக்க முயற்சிக்கிறார்கள். நாங்கள் அதற்கு பயங்கொள்ளப் போவதில்லை. 20ஆம் திகதிக்கு முன்னர் எங்களின் பிரச்சினைக்கு பதில் கிடைக்காவிட்டால் அரச தொழிற்சங்கங்கள் அனைத்தும் ஒன்றிணைந்து பாரிய தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளோம். இதுதொடர்பில் அமைச்சின் செயலாளருக்கும் தெளிவுபடுத்தியிருக்கிறோம். 08ஆம் திகதி இடம்பெறவிருக்கும் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கும் நாங்கள் ஆதரவு வழங்குவோம் என்றார்.

## தேர்தலுக்கு...

தீர்மானிக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். குருநாகல் மற்றும் சிலாபம் ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற நிகழ்வுகளின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரப் பிரச்சினையை தீர்ப்பதற்கு மக்கள் விடுதலை முன்னணி மூன்றாம் தரப்புடன் கைகோர்த்துள்ளதாகவும் அவர் குற்றஞ்சுமத்தினார்.

## இலங்கையர்...

அந்நாட்டுக்கான இலங்கைத் தூதுவர் ஹசந்தி திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும், இடிந்து வீழ்ந்த கட்டடம் ஒன்றில் வசித்ததாக நம்பப்படும் ஒன்பதாவது நபர் சம்பவம் இடம்பெற்றபோது அங்கு இருக்கவில்லையெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, துருக்கியில் மீட்புப் பணிகளை மேற்கொள்ள உதவுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரிக்கு பணிப்புரை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தலிபான்களைப்போல...

பயன்படுத்தும் செயற்பாடுகளை உடன் நிறுத்த வேண்டும் என்று சுதந்திர மக்கள் சபையின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

மாத்தறை பிரதேசத்தில் நேற்று (06) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டிருக்கிறார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

சுதந்திர தினத்தன்று மருதானை, எல்பின்சடன் அரங்குக்கு அருகில் அமைதிப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது கொடூரத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 1988- 89ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் இருந்ததுபோன்று அடிப்படை ஜனநாயக உரிமைகளுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட தாக்குதலாகவே நாங்கள் கருதுகிறோம். இது முதல் தடவை அல்ல. ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி கதிரையில் அமர்வதற்கு முன்னர் நேர்மையான அரசியல் கொள்கையை நடைமுறைப்படுத்துவேன் என்றே கூறினார். ஆனால், ஜனாதிபதி ஆசனத்தில் அமர்ந்ததன் பின்னர் தான் ஹிட்லர் என்று கூறுகிறார். அவரின் கூற்றுக்களின் உண்மைத் தன்மை இன்று தெளிவாக தெரிகிறது. மூடிமறைக்க கூடிய விடயமுமல்ல.

இந்த நாட்டுக்கு தளிபான்களின் ஆட்சி அவசியமில்லை. ஜனநாயகத்தின் அடிப்படைகளை மீறாத, நாட்டு மக்கள் சுதந்திரமாக நடமாடி, சுதந்திரமாக கலந்துரையாடி, சுதந்திரமான கருத்து வெளியிடக்கூடிய சுற்றுச்சூழலை கொண்ட கொள்கைத் திட்டமே எமக்கு அவசியமாக இருக்கிறது. விசேடமாக, தேர்தல் காலத்தில் பாராளுமன்றத்தை மூடிவிட்டு சுதந்திரம் கொண்டாடியமையானது அபாயகரமான நிலைப்பாடும் தோற்றம்பெறுகிறது.

ஜனாதிபதி ரணில், ஒருபுறம் தலிபான்களின் ஆட்சி நடவடிக்கைபோன்று ஆட்சி செயன்முறைகளையும் மறுபுறம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து 69 இலட்சம் மக்களின் இறைமையை சமூக துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியிருக்கிறார். தொடர்ந்தும் அதனையே செய்து வருகிறார். சட்ட ஒழுங்கை சீர்குழைப்பதால் ஏற்படும் பாதிப்பை விட, வேறு எதுவும் நாட்டின் உள்ளக செயற்பாடுகளில் பாதிப்பை ஏற்படுத்தும் என்று நான் கருதவில்லை.

இந்த அரசாங்கம் அழிவை பொழுதுபோக்காக கொள்கிறது. எனவே, அழிவை பொழுதுபோக்காக அரசாங்கம் எடுத்துக்கொள்ளக் கூடாது. ஆகவே, மக்களின் வாழ்க்கை, நாட்டின் எதிர்காலம், சிறுவர்களின் எதிர்காலத்துடன் விளையாடுவதற்கு அரசாங்கம் முயற்சிக்கக் கூடாது.

அதேபோன்று, எதிர்க் கட்சிக்குள்ளேயே பல்வேறு கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. தேர்தலை காலந்தாழ்த்தும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் சந்தர்ப்பத்திலும் எதிர்த் தரப்பிலிருக்கும் 23 கட்சிகளும் ஒன்றிணைந்தே தேர்தலை நடத்துவதற்கான தீர்மானங்களை பெற்றுக்கொண்டோம். எனவே, இதனை மறந்துவிடக்கூடாது. ஜனாதிபதியின் கொள்கைத் திட்டத்துக்கமைய அரசியலை உட்புகுத்தாமல் எதிர்க்கட்சி என்ற அடிப்படையில் கருத்து வேறுபாடுகளை ஓரம் வைத்துவிட்டு நாட்டுக்கு தேசிய கொள்கைத் திட்டமொன்றை வழங்குவோம் என்பதே எனது கோரிக்கையாகும். அவ்வாறு இல்லாவிட்டால் தெரிந்தோ தெரியாமலோ ஜனாதிபதியின் கொள்கைத் திட்டத்துக்கு எதிர்த்தரப்பு சோரம் போகிறது என்ற நிலைப்பாடு சமூகத்தில் உருவாகும். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என்ற அடிப்படையில் 341 உள்ளூராட்சி மன்றங்களில் 240 மன்றங்களின் அதிகாரத்தை கைப்பற்றிய கட்சியாகும். ஆனால், இம்முறை குறைந்தது 240 உள்ளூராட்சி மன்றங்களிலாவது அவர்களின் கட்சி சின்னத்தில் போட்டியிட முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. எனவே, அவர்களின் அரசியல் நடவடிக்கைகள் வெள்ளத்தால் அழிந்துள்ளன. இது அவர்களுக்கு புரியும் என்றும் கருதுகிறோம். எனவே ஏனைய கட்சிகளை போன்று அவர்களால் தேர்தல் பிரசாரங்களை முன்னெடுக்க முடியாது என்றும் சுட்டிக்காட்டினார்.

## இலங்கை...

இலங்கையின் 75ஆவது தேசிய சுதந்திர தின நிகழ்வில் கலந்துகொள்வதற்காக வருகை தந்திருந்தார். இக்கட்டான சூழ்நிலையில் இலங்கைக்கு உதவியமைக்காக பங்களாதேஷ் அரசுக்கும் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கும் நன்றியைத் தெரிவிப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியதையும் மொமன் நினைவுபடுத்தியுள்ளார்.

பங்களாதேஷ் அரசாங்கம் இலங்கைக்கு வழங்கிய 200 மில்லியன் அமெரிக்க டொலர் கடனை மீளச் செலுத்துவதற்கு எதிர்வரும் செப்டெம்பர் வரை கால நீடிப்பு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதியின்...

பல பாகங்களில் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாக அறிவித்திருக்கிறார்கள்.

மேலும் நாளை 08ஆம் திகதி அரச மற்றும் தனியார் மருத்துவமனைகளில் அவசர சிகிச்சைப் பிரிவு தவிர்ந்த ஏனைய சகல சிகிச்சைப் பிரிவுகளும் முடங்குமென்றும் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவித்திருக்கிறது.

பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடர் கடந்த 27ஆம் திகதி முதல் நாளை 08ஆம் திகதி வரை ஜனாதிபதியினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய நாளைய தினம் கூடவுள்ள பாராளுமன்ற கூட்டத்தொடரின்போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அக்கிராசன உரையின்போது நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைமை, தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு, சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவி, தேர்தல் செயற்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து கவனம் செலுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையிலேயே, 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தும், அரசாங்கத்தின் வரிக்கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் அரசியல் கட்சிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாக அறிவித்திருக்கிறார்கள்.

“ஜனாதிபதி சுதந்திரத் தினத்தன்று நாட்டு மக்களுக்கு ஆற்றிய விசேட உரை நாட்டின் ஐக்கியத்தை இல்லாமலாக்கும் வகையிலேயே அமைந்திருந்தது. நாட்டில் போர் சூழல் இருந்தபோது இலங்கை - இந்திய உடன்படிக்கையினூடாக எமது அரசியலமைப்பில் 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை கொண்டுவந்தார்கள். ஆனால், இந்த நாட்டு மக்களின் அபிலாஷைகளையும் தேவைகளையும் நிறைவேற்றுவதற்காக இந்த அரசியலமைப்பு திருத்தம் கொண்டுவரப்படவில்லை. சிங்கள, தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவ மக்களின் அபிலாஷைகள் இந்த திருத்தத்தில் உள்ளடக்கப்படவில்லை. முழுமையாக இந்தியாவின் தேவைப்பாட்டுக்காகவே இந்த அரசியலமைப்பு திருத்தம் கொண்டுவரப்பட்டது. நாட்டில் மீண்டும் நெருக்கடி நிலைமையை ஏற்படுத்துவதற்காகவே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முயற்சிக்கிறார். அதற்கு சுமந்திரன் போன்ற எம்.பிக்களும் துணைபுரிகிறார்கள். 13ஆவது அரசியலமைப்புக்கு, 35 வருடங்களின் பின்னர் மீண்டும் உயிர்கொடுக்கவே ஜனாதிபதி முயற்சித்து வருகிறார். ஐக்கியம் என்பது சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் என அனைவருக்கும் ஒன்றானதாகும். வடக்கு மக்களுக்கு பிரச்சினைகள் இருக்கின்றன. அவை பொருளாதாரம் சார்ந்த பிரச்சினைகளாகும். வடக்குக்கும் தெற்குக்கும் சமமான பிரச்சினைகளே இருக்கின்றன. இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும்போது நாட்டில் வர்க்க பிரச்சினைகள் இருக்காது. எனவே, பெப்ரவரி 08ஆம் திகதி இடம்பெறவிருக்கும் அக்கிராசன உரையில் 13ஆவது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பான யோசனையை மீளப்பெறவில்லை என்றால் 5000 பிக்குகளை 08ஆம் திகதி காலையில் கொழும்புக்கு அழைத்து வருவோம்” என்றும், அதற்கு மக்களையும் இணைத்துக்கொள்வோம் என்றும் 13ஆவது அரசியலமைப்புக்கு எதிராக பிக்கு ஒன்றியம் நேற்று முன்தினம் அறிவித்திருக்கிறது.

இதேவேளை, “ஜனாதிபதிக்கு ஏதாவதொரு விதத்தில் கொள்கை விளக்கவுரையை மேற்கொள்வதற்காகவே பாராளுமன்றம் அநேகமாக ஒத்திவைக்கப்படும். ஆனால், எமது நாட்டில் 6-7 மாதங்களில் இரு முறை பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இதனூடாக எங்களுக்கு புதிய சந்தேகமும் எழுகிறது. இதனூடாக பாராளுமன்றத்தில் இடம்பெற்றுவந்த சகல செயற்பாடுகளும் செயலிழந்துள்ளன. கோபா மற்றும் கோப் குழுக்களின் நடவடிக்கைகளை புதிதாக ஆரம்பிக்க நேர்ந்துள்ளது. நாளையும் (08) ஏற்கனவே கூறிய விடயங்களையே கூறப் போகிறார். அல்லது உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைக்கவும் முடியும். இவற்றை மாத்திரமே தற்போதைய நிலைமையில் ஜனாதிபதியால் செய்யமுடியும். அரசியலமைப்பினூடாக வழங்கப்பட்டு அதிகாரத்தை அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்துவதை கடுமையாக கண்டிக்கிறோம். எனவே, நாளைய பாராளுமன்ற கூட்டத் தொடர் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் கலந்துகொள்ளமாட்டார்கள்” என்று அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க நேற்று தெரிவித்தார்.

மேலும், “வரிக்கொள்கை குறித்து திருத்தங்களை முன்வைக்குமாறு கோரியிருந்தோம். ஆனால் இதுவரையில் சாதகமான பதில் எதுவும் எங்களுக்கு கிடைக்கவில்லை. இந்த வாரத்தை தீர்மானமிக்க வாரமாக மாற்றியமைக்க அனைத்து தொழிற்சங்கங்களின் ஒன்றியம் தீர்மானித்திருக்கிறது. 08ஆம் திகதியான நாளைய தினம் கொழும்பில் தொழிற்சங்கங்களினால் பாரியளவான எதிர்ப்பு நடவடிக்கையொன்றை முன்னெடுக்கவுள்ளோம். வைத்திய துறைசார் தொழிற்சங்கங்கள் மாத்திரமின்றி சகல துறைசார் தொழிற்சங்கங்களும் இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளன.

இதனை ஒத்தவகையில் ஒவ்வொரு தொழிற்சங்கங்களும் அவர்களின் துறைசார்பில் பல்வேறு தீர்மானங்களை எடுத்திருக்கிறார்கள். வரி திருத்தத்துக்கு அப்பால் அரச மற்றும் தனியார் மருத்துவமனைகளின் அவசர சிகிச்சைப் பிரிவு தவிர்ந்த ஏனைய அனைத்து சிகிச்சைப் பிரிவுகளிலும் சேவையிலிருந்து ஒதுங்கிக்கொள்ள அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தீர்மானித்திருக்கிறது. எனவே, அவசர சிகிச்சைப் பிரிவு தவிர்ந்த ஏனைய சகல பிரிவுகளும் 08ஆம் திகதி முடக்கப்படும்” என்று அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் ஹரித அளுத்கே நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

## நீர்வெறுப்பு நோய்...

இந்த நிலைமை குறித்து நேற்று (06) ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில்,

நீர்வெறுப்பு நோய்க்கான தடுப்பூசிகளை நாடுகளுக்கு பெற்றுக்கொடுக்கும் வேலைத்திட்டத்தினூடாகவே கடந்த சிலவருடங்களாக நீர்வெறுப்பு நோயை கட்டுப்படுத்தக்கூடியதாக அமைந்திருந்தது. இருந்தபோதும், துரதிர்ஷ்டவசமாக தற்போதைய நாட்களில் நீர்வெறுப்பு நோய்க்கான தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டிருக்கின்றன. சுகாதார திணைக்களத்தில் தடுப்பூசிகளுக்கான தடுப்பாடு பாரியளவில் அதிகரித்துள்ளது. எனவே, தடுப்பூசி விநியோகம் முறையாக இடம்பெறாமையின் காரணமாக இந்த வேலைத்திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுவதில்லை.

வருடத்துக்கு ஒருமுறை நாய்களுக்கு இந்த தடுப்பூசிகளை பெற்றுக்கொடுக்க வேண்டியது அவசியமாகும். ஆனால், இந்த வேலைத்திட்டமானது கடந்த 05 மாதங்களுக்கு மேலாக முன்னெடுக்கப்படவில்லை. கடந்த டிசம்பர் மாதத்திலிருந்து கொவிட் - 19, எரிபொருள் தட்டுப்பாடு, தடுப்பூசி தட்டுப்பாட்டின் காரணமாகவே இந்த வேலைத்திட்டத்தை முடக்க நேர்ந்திருந்தது.

எனவே, எதிர்காலத்தில் நீர்வெறுப்பு நோயினால் மரணங்கள் அதிகரிப்பதற்கான எச்சரிக்கை நிலை நிலவுகிறது. ஆகவே, நாய்களிடமிருந்து விலகியிருக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். அதேபோன்று, சந்தேகத்துக்கு இடமான நாயொன்று கடித்தால் அண்மையிலுள்ள வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சைப் பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

எவ்வாறாயினும், எதிர்காலத்தில் நீர்வெறுப்பு நோயினால் ஏற்படக்கூடிய மரணங்கள் அதிகரிக்கலாம் என்றே மருத்துவர்கள் எதிர்வு கூறியிருக்கிறார்கள். இதனை தவிர்த்துக்கொள்ள வேண்டுமெனில் விரைவாக நீர்வெறுப்பு நோய்க்கான தடுப்பூசிகளை இறக்குமதி செய்து அடிமட்டத்திலிருந்து அவற்றை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## லாவ்ஸ் எரிவாயு...

அதன் புதிய விலை ஐயாயிரத்து 280 ரூபாவாகும்.

மேலும், ஐந்து கிலோ கிராம் எரிவாயு சிலிண்டரின் விலை 80 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு இரண்டாயிரத்து 112 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது. இதேவேளை, இரண்டு கிலோகிராம் எரியாவு சிலிண்டரின் விலை 32 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் புதிய விலை 845 ரூபாவாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## பான் கி மூன்...

ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் செயலாளர் நாயகம் பான் கி மூன் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று நாட்டிற்கு வருகை தந்துள்ளார்.

நாட்டிற்கு வருகை தந்த அவரை, வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய வரவேற்றுள்ளார்.

பான் கி மூனுடன் மேலும் 04 இராஜதந்திரிகளும் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர்.

## மஹிந்தவுடனான...

இருவரும் சேர்ந்து வெளியிட்ட கூட்டறிக்கையை ஞாபகப்படுத்த கோருவதாக தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

மே 24, 2009 அன்று வெளியிடப்பட்ட அந்த கூட்டறிக்கையில் அன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தான் தமிழ்க் கட்சிகளுடன் பேச்சு நடத்தி 13ஐ அமுல் செய்து, அதை மென்மேலும் மேம்படுத்த 13 பிளஸ்க்கு உடன்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அதேபோல் சர்வதேச மனித உரிமை நியமங்களை இலங்கையில் கடைபிடிப்பதாகவும் உலக மன்றமான ஐ.நாவுக்கு, அதன் பிரதான நிறைவேற்று அதிகாரியான ஐ.நா. செயலாளர் பான் கி மூன், தனக்கு உறுதியளித்ததை, இன்றைய அரசின் பிரதான கட்சியான பொதுஜன முன்னணியின் அதிகாரப்பூர்வ தலைவரான மஹிந்த ராஜபக்ஷவுக்கும், அவரது எம்.பிக்களுக்கும் இவர்களின் பின்னால் இன்னமும் நிற்கும் சில பௌத்த பிக்குகளுக்கும் ஞாபகப்படுத்த வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் மனோ எம்.பி. நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இன்று, பொறுப்பை நிறைவேற்றாத தவறுகளை செய்து, குற்றவாளி கூண்டில் நிற்பது அன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மட்டுமல்ல, ஒட்டு மொத்த ஐ.நா. அமைப்பும் என நான் நம்புகிறேன். இவர்கள் அனைவரும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட வேண்டும்.

பான் கி மூன் - மஹிந்த கூட்டறிக்கையில், கையெழுத்து இட்ட ஒரு தரப்பு வார்த்தை தவறுமானால், அடுத்த தரப்பு அதை தட்டிக்கேட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதன் பெயர்தான் கூட்டறிக்கை. ஆனால், அதை ஐ.நா. செய்யவில்லை. அது மட்டுமல்ல, போர் நிகழ்ந்த போது, வன்னியில் இருந்த ஐ.நா. அலுவலகத்தை இலங்கை அரசு சொன்னது, என்பதற்காக மூடி விட்டு நாட்டை விட்டு வெளியேறிய அன்றைய ஐ.நாவின் முடிவுக்கு முன்னாள் ஐ.நா. செயலாளர் இந்த பான் கி மூன் பொறுப்பேற்க வேண்டும்.

அதனால்தான், இலங்கையின் இறுதி யுத்தம், சாட்சியமில்லா யுத்தமாக நிகழ்ந்தது. இன்று போர் முடிந்து ஏறக்குறைய 14 ஆண்டுகள் ஓடியுள்ளன. முன்னாள் ஐ.நா. செயலாளர் இலங்கை போர் தொடர்பில் அன்று உலக மாமன்றமான ஐ.நா. சபை விட்ட தவறை இன்றாவது ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இன்று அவர் அதிகாரத்தில் இல்லாவிட்டாலும் கூட அவர் அதை பற்றி பேச வேண்டும். அது உலக அளவில் எடுபடும். அன்று இலங்கை யுத்தம் தொடர்பாக ஐ.நா விட்ட தவறு தொடர்பில் அன்றே ஐ.நா சபைக்குள் ஒரு உள்ளக அறிக்கை தயார் செய்யப்பட்டதை நான் அறிவேன். அது பற்றி, முன்னாள் ஐ.நா செயலாளர் பான் கி மூன் இனியாவது பகிரங்கமாக பேச வேண்டும். இலங்கையின் ஊடகவியலாளர்கள் பான் கி மூனைக் கண்டு இது பற்றி கேள்வி எழுப்ப வேண்டும். இலங்கை வந்துள்ள முன்னாள் ஐ.நா செயலாளர் பான் கி மூன் சந்திக்கும் நபர்களின் நிகழ்ச்சி நிரலில் நான் இல்லை. நான் அவரை கண்டால் இதை அவர் முகத்துக்கே சொல்லி கேட்க விரும்புகிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

# ஒன்பதாவது பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடருக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி

★அரச கொள்கைப் பிரகடனத்தை ஜனாதிபதி நாளை காலை 10.00 மணிக்கு முன்வைப்பார்

★ முப்படையினரின் அணிவகுப்பு மரியாதை மற்றும் வாகன பவனி இடம்பெறாது





ஒன்பதாவது பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் நாளை 08ஆம் திகதி வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. இது தொடர்பான ஒத்திகை பாராளுமன்ற வளாகத்தில் நேற்று (06) நடைபெற்றதுடன், கோட்டே ஜனாதிபதி மகளிர் கல்லூரி மாணவியர் உள்ளிட்ட பலர் இந்த ஒத்திகையில் பங்கேற்றிருந்தனர்.

அரசியலமைப்பின் 33ஆவது உறுப்புரையில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைய ஜனாதிபதி நாளை காலை 10.00 மணிக்கு பாராளுமன்றத்தில் அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தை முன்வைக்கவுள்ளார்.

ஜனாதிபதி பாராளுமன்றத்துக்கு வருகைதரும் நிகழ்வை மிகவும் எளிமையான முறையில் நடத்துமாறு அவர் வழங்கிய ஆலோசனைக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும், இதற்கமைய மரியாதை வேட்டுக்கள் தீர்த்தல் மற்றும் வாகனத் தொடரணி என்பன இடம்பெறாது என பாராளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாந்து தெரிவித்தார்.

காலை 09.15 மணிக்குள் விசேட விருந்தினர்களுக்கு தங்கள் இருக்கைகளில் அமருமாறு கோரப்பட்டிருப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மற்றும் அவருடைய பாரியாரின் வருகையைத் தொடர்ந்து, பிரதமர் தினேஷ் குணவர்தனவின் வருகையும், அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி மற்றும் முதற்பெண்மணியின் வருகையும் இடம்பெறவுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக பாராளுமன்ற கட்டடத்தின் பிரதான நுழைவாயிலின் படிக்கட்டுக்கு அருகில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை வரவேற்பார்கள்.

படைக்கலசேவிதர், பிரதி படைக்கல சேவிதர் மற்றும் உதவி படைக்கல சேவிதர் ஆகியோர் முன்செல்ல சபாநாயகர், பாராளுமன்ற செயலாளர் நாயகம் ஆகியோரினால் ஜனாதிபதி பாராளுமன்ற கட்டடத்துக்குள் அழைத்துச் செல்லப்படுவார்.

பாராளுமன்றத்தின் பிரதான நுழைவாயிலுக்கு அருகே கோட்டே ஜனாதிபதி மகளிர் கல்லூரி மாணவியர் ஜயமங்கல கீதம் இசைக்கவுள்ளனர்.

இதன் பின்னர் உடையணி அறைக்கு அழைத்துச் செல்லப்படவுள்ள ஜனாதிபதி, காலை 9.55 மணிவரை அங்கிருப்பதுடன், அதனைத் தொடர்ந்து பாரம்பரியத்துக்கு அமையப் பிரதிப் படைக்கல சேவிதர், செங்கோலைக் கையில் தாங்கியவாறு படைக்கல சேவிதர், ஜனாதிபதி, சபாநாயகர், செயலாளர் குழு மற்றும் உதவிப் படைக்கல சேவிதர் என்ற வரிசைப்படி அணிவகுத்து சபா மண்டபத்துக்குள் செல்வர். சபைக்குள் நுழையும்போது உதவி படைக்கல சேவிதர் 'கௌரவ ஜனாதிபதி' எனத் தெரிவித்ததும் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தமது ஆசனங்களிலிருந்து எழுந்து நிற்பது பாரம்பரியமாக இடம்பெறும்.

சபா மண்டபத்துக்கு அழைத்துவரப்படும் ஜனாதிபதி அக்கிராசனத்தில் அமர்ந்து சபைக்குத் தலைமை தாங்குவார். இதன்போது சபாநாயகர், பாராளுமன்ற குழுநிலையின்போது அமரும் கீழ் பகுதியிலுள்ள ஆசனத்தில் செயலாளர் குழுவுடன் அமர்ந்திருப்பார். இதனைத் தொடர்ந்து ஜனாதிபதியினால் அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடன உரை நிகழ்த்தப்பட்டு, சபை 09ஆம் திகதி காலை 9.30 மணிவரை ஒத்திவைக்கப்படும். சபை ஒத்திவைக்கப்பட்டதும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அழைக்கப்பட்ட விருந்தினர்களுக்கு தேநீர் விருந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



கொழும்பு கங்காராம விகாரையின் வருடாந்த நவம் பெரஹரவில் நேற்று முன்தினம் (05) ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் கலந்துகொண்டார். (படப்பிடிப்பு: லலித் பெரேரா)

## தினசரி பலாபலன்கள்

சுபகிருது வருடம் தை மாதம்
24ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

**மேஷம்**: அதிர்ஷ்டம் நிறைந்த நல்ல நாள், தெளிந்த மனதுடன் அனைத்தையும் வெற்றி கொள்வீர்கள்.

**ரிஷபம்**: கல்வியால் அனைத்து பெருமைகளையும் அடைவீர்கள். தான தர்மங்களால் மன நிறைவு கொள்வீர்கள்.

**மிதுனம்**: குறுகிய பயணங்கள் மன உளைச்சலைத் தரும், இளைய சகோதர வகையில் உதவிகள் உண்டு.

**கடகம்**: வீண் மனக்குழப்பங்கள் வேண்டாம். நிதானமாக செயல்பட்டால் வெற்றி உங்களுக்கே.

**சிம்மம்**: ஞாபக மறதியால் முக்கிய சில காரியங்களைத் தவறவிடுவீர்கள். மனதைக் கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள்.

**கன்னி**: உங்கள் கையில் உள்ள பணம், பொருள் என்பவற்றைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். தேவையற்ற செலவுகள் ஏற்படும்.

**துலாம்**: தொட்டது துலங்கும் நாள். தொழில் வியாபாரத்தால் அதிக நன்மைகளையும் இலாபத்தையும் அடைவீர்கள்.

**விருச்சிகம்**: செய்தொழிலில் பகைவர்களை வெற்றிக் கொள்வீர்கள். அரச நன்மைகள், உதவிகள் உண்டு.

**தனுசு**: எதிர்பாராத உறவினர் வருகையால் சற்று செலவுகள் உண்டு. பிள்ளைகளால் இலாபங்கள் உண்டு.

**மகரம்**: வீணான டென்ஷனால் மனதை போட்டுக் குழப்பிக் கொள்வீர்கள். அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம்.

**கும்பம்**: கூட்டு வியாபாரத்தில் இலாபங்கள் உண்டு. காதல் களியாட்டங்கள் நிறைந்த நாள்.

**மீனம்**: விரோதிகளை புத்தியால் வெற்றி கொள்வீர்கள். நினைத்த காரியம் இன்று நிறைவேறும்.

| | |
|---|---|
| திதி | :துவிதியை பி.இ. 4.28 வரை பின் திரிதியை |
| நட்சத்திரம் | :மகம்; மாலை 5.45 வரை பின் பூரம் |
| யோகம் | :சித்த யோகம் (சுப காரியம் நன்மை) |
| வார சூலை | :மேற்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது |
| நல்ல நேரம் | :மு.ப. 8.33 – 9.33 மணி வரை |
| ராகு காலம் | :3.33 – 5.03 மணி வரை |
| எமகண்டம் | :9.33 – 11.03 மணி வரை |
| குளிகை | :12.33 – 2.03 மணி வரை |
| சந்திராஷ்டமம் | :மகர ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும் |
| தன அதிர்ஷ்டம் | : ஆயில்யம், கேட்டை, ரேவதி(பிறந்தவர்களுக்கு) |

கணிப்பு : சிவா பாஸ்கரராவ்
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

# இலங்கை சுதந்திர தொழிலாளர்கள் சங்கம் ஏற்பாட்டில் நாளை கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டப் பேரணி

(அஷ்ரப் ஏ சமத்)



இலங்கை சுதந்திர தொழிலாளர்கள் சங்கம் தொழிலாளர்களை இணைத்துக் கொண்டு நாளை 08ஆம் திகதி கொழும்பில் பாரியதொரு ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தவுள்ளதாக இலங்கை சுதந்திர தொழிலாளர் சங்கத்தின் செயலாளர் தேசபந்து லெஸ்லி தேவேந்திரா தெரிவித்தார்.

மேற்கண்டவாறு இலங்கை தொழிலாளர்கள் சங்கத்தின் செயலாளர் தலைமையில் ராஜகிரியவில் உள்ள தொழிலாளர்கள் சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே செயலாளர் தெரிவித்தார்.

இவ் ஊடக மாநாட்டில் லேக் ஹவுஸ் சுதந்திர தொழிலாளர் சங்கத்தின் அனுர கொடகாந்த, எயார்லங்கா, ஜகத் விஜேவர்த்தன, பெற்றோலியம், இலங்கை மின்சார சபை, நீர்விநியோக வடிகாலமைப்புச் சபை போன்ற அரச நிறுவனங்களின் தொழிற்சங்கத்தின் தலைவர்கள், செயலாளர்களும் இவ் ஊடக மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துக்களை தெரிவித்தனர்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த செயலாளர் லெஸ்லி தேவாநந்தா,

இலங்கையில் தற்போதைய காலகட்டத்தில் என்றுமில்லாதவாறு பொது மக்கள் மீது பாரிய வரிகளை அரசாங்கம் சுமத்தியுள்ளது. இதனை மக்கள் தாங்கிக் கொள்ளாத அளவுக்கு சொல்லொண்ணாத் துன்பங்களையும் அவலங்களையும் எதிர்நோக்குகின்றனர்.

மின்சார சபை தமது வாடிக்கையாளர்கள் மீது நூற்றுக்கு 70 வீதத்திலிருந்து 200 வீதம் வரை மின்சாரக் கட்டணத்தினை அதிகரித்துள்ளது. அதேபோன்றுதான் நீர்விநியோகம், பெற்றோலியம், சமையல் எரிவாயு போன்ற அத்தியாவசியப் பொருட்களுக்கும் நாளுக்கு நாள் வரியை அதிகரித்து விலைகளையும் அதிகரித்துள்ளது. இதனால் மக்கள் இந்த நாட்டில் அன்றாடம் வாழமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

மின்சார சபையை பல்வேறு நாடுகளுக்கும் விற்று அதனை அவர்கள் எதிர்பார்த்த இலாபத்தினைப் பெற்றுக் கொள்ளவே பாரிய மின்சார பாவனை அதிகரிப்பினை மக்கள் தலைமீது சுமத்தியுள்ளது. இலங்கை மின்சார சபையின் தலைவருக்கு ஓய்வு பெற்ற இரண்டு பொதுமுகாமையாளர்கள் இருவர் ஆலோசகர்களாக உள்ளனர். இவர்கள் மாதாந்தம் 6 இலட்சம் ரூபா சம்பளம் பெறுகின்றனர்.

ஆகவே தொழிற்சங்கங்கள் அரசுக்கு அழுத்தம் கொடுப்பதற்கே ஒன்றிணையவுள்ளோம். இந்த நாட்டில் உள்ள சகல அதிகார சபைகள், கூட்டுத்தாபனங்களது சுதந்திர தொழிலாளர்கள் சங்கங்கள் பெப்ரவரி 08ஆம் திகதி புறக்கோட்டையில் பாரிய தொழிற்சங்க போராட்டமொன்றை நடத்தவுள்ளதாகவும் தொழிற்சங்க பிரநிதிகள் கருத்துத் தெரிவித்தனர்.

# இவ்வருடம் அரிசிக்கு தட்டுப்பாடில்லை

## விவசாயத் திணைக்களம் தெரிவிப்பு

நாட்டில் இந்த வருடம் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்படாது என விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக அரிசியை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியமில்லை என அத்திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

எவ்வாறாயினும், நெற்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதில் பல பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளதாக பல்வேறு பிரதேசங்களில் உள்ள விவசாயிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அண்மைய நாட்களாக நாட்டின் ஒரு சில பாகங்களில் உள்ள வயல் நிலங்களில் நெற்கதிர்கள் மஞ்சல் நிறத்தில் இருப்பதாக விவசாயிகள் குற்றம்சாட்டுகின்றனர்.

நெற்கதிர்களில் ஏற்படும் பொற்றாசியம் பற்றாக்குறைவே இதற்கு காரணமென விவசாயத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறான நோய் நிலைமைகளில் இருந்து பயிர்களை பாதுகாப்பதற்கு, உரிய முறையில் சரியான நேரத்தில் உரமிடப்படுவது கட்டாயமாகும்.

எனினும், உரம் கிடைப்பதில் ஒரு சில இடங்களில் தாமதம் நிலவுவதால், இவ்வாறான நோய் நிலைமைகள் ஏற்படுவதாக விவசாயிகள் குறிப்பிடுகின்றனர்.

# மலையக தொழிலாளர் முன்னணி

# அங்கத்தவர்களின் சந்தாப் பணத்தை அனுப்பிவைக்க கடிதத்தில் அறிவிப்பு

## அரவிந்தகுமாருக்கு எதிராக நடவடிக்கை எடுப்போமென்கிறார் இராதா எம்.பி.



மலையக தொழிலாளர் முன்னணி அங்கத்தவர்களின் சந்தாப் பணத்தை பாராளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்தகுமார் தலைமையில் செயற்படுகின்ற ஐக்கிய தொழிலாளர் முன்னணியின் தொழிற்சங்க காரியாலயத்திற்கு அனுப்பி வைக்குமாறு கடிதம் மூலமாக அறிவித்திருப்பதானது தவறான நிதி மோசடி என்பதை மலையக மக்கள் முன்னணி சுட்டிக்காட்ட விரும்புகின்றது. இது தொடர்பாக நாம் உரிய நடவடிக்கைகளை எடுக்கவுள்ளோம் என மலையக மக்கள் முன்னணி மலையக தொழிலாளர் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

மலையக மக்கள் முன்னணி மலையக தொழிலாளர் முன்னணி ஆகியவற்றின் நிர்வாக சபை கூட்டம் நேற்று முன்தினம் (05) தலவாக்கலை விருந்தகத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர், எங்களுடைய கட்சியின் உறுப்பினராக இருந்த அ.அரவிந்தகுமார் இந்த அரசாங்கத்திற்கு ஆதரவளித்து அமைச்சராக செயற்படுகின்ற நிலையில், அவர் தற்போது மலையக தொழிலாளர் முன்னணி அங்கத்தவர்களின் சந்தாப் பணத்தை அரவிந்தகுமார் தலைமைத்துவம் வகிக்கின்ற ஐக்கிய தொழிலாளர் முன்னணி என்ற அமைப்பினுடைய காரியாலயத்திற்கு அனுப்பிவைக்குமாறு அவருடைய தொழிற்சங்கத்தின் தொழில் உறவு அதிகாரி ஊடாக கடிதம் மூலமாக அறிவித்திருக்கின்றார். இது முற்றிலும் தவறானதும் நிதி மோசடியில் ஈடுபடுகின்ற ஒரு செயலாகவுமே மலையக மக்கள் முன்னணியும் மலையக தொழிலாளர் முன்னணியும் பார்ப்ப தாகவும் அவர் குறிப்பிட்டார்.

# ஒரு இலட்ச ரூபா பணம் கேட்டு தர மறுத்ததால் தலையில் கட்டையால் தாக்கி கொலை செய்தேன்

## ஆடையக உரிமையாளர் கொலை குறித்து கொலையாளி வாக்குமூலம்

பத்தரமுல்ல - பெலவத்தை பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுவரும் வீடொன்றின் நீச்சல் தடாகத்திலிருந்து, அண்மையில் சடலமாக மீட்கப்பட்ட ஆடையக உரிமையாளரான தொழிலதிபர் ரொஷான் வன்னிநாயக்க கொலைசெய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கணவன், மனைவியான இளம் தம்பதியினர் பொலிஸாரால் நேற்று முன்தினம் (05) கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நாரஹேன்பிட்டி பிரதேசத்தை சேர்ந்த அஸீம்தீன் இன்சாப் டீன் (27) அவரது மனைவி ஹுஸ்வா பஸ்லிம் (23) ஆகியோரே சம்பவத்தில் கைதாகினர்.

கொலைசெய்ததை கணவன்மனைவி இருவரும் ஒப்புக்கொண்டதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். சந்தேகநபர்கள் கடவத்தையில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாரின் உள்ளகத் தகவல்களின்படி, பிரதான சந்தேகநபர் கந்தானையிலிருந்து கடவத்தைக்குச் சென்று கடவத்தையில் உள்ள பிரபல ஆடை விற்பனை நிலையத்திற்கு அருகில் தங்கியிருந்தபோதே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பிரதான சந்தேகநபர் கடைக்கு அருகில் தங்கியிருப்பதாக பிரதான சந்தேகநபரின் மனைவியின் உறவினர் ஒருவர் கந்தானை பொலிஸ் அதிகாரி ஒருவருக்கு தகவல் வழங்கியதன் அடிப்படையில் இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 30ஆம் திகதி தொழிலதிபரை கொலைசெய்த பின்னர், தம்பதியினர் நாட்டை விட்டு தப்பிச்செல்ல முயற்சித்துள்ளனர். தொழிலதிபரின் வீட்டிலிருந்தபடி, அவரது தொலைபேசி வழியாக, தொழிலதிபரின் சொந்த கிரெடிட் கார்டில் இந்தோனேசியா செல்வதற்கு இரண்டு விமான டிக்கெட்டுகளை முன்பதிவு செய்துள்ளனர்.

31ஆம் திகதி அதிகாலையில் அதிவேக நெடுஞ்சாலையில் தொழிலதிபரின் சொந்த காரில் விமான நிலையத்திற்கு பயணம் செய்தனர். ஜா-எலக்கு அண்மையில் கார் பழுதடைந்ததால், அதிவேக நெடுஞ்சாலையிலிருந்து காரை அகற்ற தொழிலதிபரின் தொலைபேசியை பயன்படுத்தி 1969 என்ற அவசர இலக்கத்திற்கு அழைப்பேற்படுத்தி வாகனமொன்றைப் பெற்று, காரை அகற்றினர்.

பின்னர் கராஜ் ஒன்றிற்கு வந்துள்ளனர். எனினும், கராஜ் பூட்டப்பட்டிருந்ததால், அதன் முன்பகுதியில் காரை நிறுத்திவிட்டு, ஹொரணை சந்திவரை அந்த வாகனத்தில் பயணித்தனர். 10ஆயிரம் ரூபா பணமாகவும், 5ஆயிரம் ரூபா ஒன்லைன் மூலமாகவும், அந்த அவசரசேவை வாகனத்திற்கு வழங்கினர்.

பின்னர் விமான நிலையம் வந்து சில மணித்தியாலங்களுக்குள் 9 இலட்சம் ரூபாவிற்கு பொருட்கள் வாங்கினர்.

இந்தோனேசியா செல்ல முயன்றபோதும், விசா பிரச்சினை காரணமாக அவர்களால் புறப்பட முடியவில்லை. பஸ்ஸில் ஏறி விமான நிலையத்திலிருந்து கொலன்னாவைக்கு வந்ததாக கணவர் தெரிவித்துள்ளார். பின்னர், அவர்களின் தொலைபேசிகளைக் கண்காணித்த புலனாய்வாளர்கள், அவர்களின் இருப்பிடங்களைக் கண்டறிந்தனர்.

சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்படி, பிரதான சந்தேக நபர் கடந்த 30ஆம் திகதி மாலை 6.37 மணியளவில் அல்லது அதற்கு அண்மையான நேரத்தில் பெலவத்தையில் உள்ள வீட்டிற்குள் நுழைந்துள்ளார். சுமார் இரண்டு மணிநேரம் இந்த வீட்டில் அவர் தங்கியிருந்ததாக கூறப்படுகிறது. இதன்போது கொலை இடம்பெற்றுள்ளது.

மொபைல் ஆப் மூலம் இந்த தொழிலதிபரை தெரிந்துகொண்டதாக பொலிஸாரிடம் கூறியுள்ளார். கொலை செய்யப்பட்ட நேரத்தில் சந்தேக நபரும் வர்த்தகரும் நீச்சல் தடாகத்தில் இருந்ததாகவும் அவசர காரியம் ஒன்றுக்காக ஒரு இலட்ச ரூபாவை தருமாறு தொழிலதிபரிடம் கேட்டதாகவும் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

இவ்வளவு பெரிய தொகையை கொடுக்க வர்த்தகர் மறுத்ததால் ஆத்திரமடைந்து தனது தலையில் கட்டையால் தாக்கியதாக சந்தேகநபர் தெரிவித்துள்ளார். பின்னர் வியாபாரியை நீச்சல் தடாகத்தில் வீசிவிட்டு வாகனத்தை எடுத்துக்கொண்டு கொலன்னாவைக்கு சென்றதாக சந்தேகநபர் தெரிவித்துள்ளார்.

கொலை செய்தவரின் மனைவி சில நாட்களாக வெளிநாடு செல்ல வலியுறுத்தியதாகவும், அதனால் அவரையும் அழைத்துச் செல்ல வேண்டியதாயிற்று எனக் கூறியுள்ளார்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2023, பெப்ரவரி 07ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# பான் கி மூனும் அவரின் மனசாட்சியும்!

ஐக்கிய நாடுகளின் அமைப்பின் முன்னாள் பொதுச் செயலாளர் பான் கி மூன் நேற்று இலங்கைக்கு வருகை தந்தார்.

இந்த விஜயத்தின்போது அபிவிருத்தி மற்றும் காலநிலை மாற்றம் போன்ற விடயங்கள் தொடர்பில் சில உடன்படிக்கைகளில் பான் கி மூன் கைச்சாத்திடுவார் என தெரிவிக்கப்படுகின்றது. பான் கி மூன் , இன்றைய தினம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

தென் கொரியாவின் உலக பசுமை வளர்ச்சி நிறுவனத்தின் தலைவராக பான் கி மூன் தற்பொழுது கடமையாற்றி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. காலநிலை மாற்றம் தொடர்பான பல்கலைக்கழகமொன்றை இலங்கையில் நிறுவுவது குறித்தும் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளது.

அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் செயலாளர் நாயகமாக பான் கி மூன் பணியாற்றியபோது 2016 ஒகஸ்ட் 31ஆம் திகதியிலிருந்து செப்டெம்பர் 02ஆம் திகதிவரை இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார். அப்போது பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன ஆகியோரையும் அவர் சந்தித்திருந்தார்.

''இலங்கையின் இறுதிக்கட்டப் போரின்போது ஐ.நா. சபை தவறு இழைத்துவிட்டது. ஐ.நா.வின் பிரதிநிதிகள் முறையாக செயற்பட்டிருந்தால் அதிக உயிர்களை காப்பாற்றியிருக்க முடியும். இலங்கைப் போர் மூலம் ஐ.நா. சபை பல பாடங்களைக் கற்றுள்ளது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இராணுவம் குறைக்கப்பட்டு தமிழர்களை மீள் குடியேற்றம் செய்ய வேண்டும். இன நல்லிணக்கத்தைப் பேண வேண்டும், மனித உரிமைகளைக் காப்பாற்ற வேண்டும்'' என்று பான் கி மூன் கொழும்பில் அப்போது கூறியிருந்தார்.

இப்படியான ஒப்புதல் வாக்குமூலம் வழங்கிய பான் கி மூன், இப்போது காலநிலை ஒப்பந்தம் செய்வதற்காக இலங்கை வருகிறார். 2016ஆம் ஆண்டுவரை போருக்குப் பின்னர் எதுவும் நடக்காத இலங்கையில் இப்போது 2023 வரையாவது ஏதாவது நடந்ததா, மனித உரிமைகளில், தமிழருக்கு தீர்வு வழங்கும் விடயங்களில் ஏதாவது முன்னேற்றம் இருக்கிறதா என்பதை பார்த்தும் கேட்டும் அறிந்துகொள்ள மூனுக்கு இப்போது ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

2009ஆம் ஆண்டு இறுதிப்போர் நடந்த காலகட்டத்தில் ஐ.நா. சபையின் பொதுச் செயலாளராக இருந்த பான் கி மூனிடம் இலங்கை விவகாரம் குறித்தும் அப்பாவி பொதுமக்களின் உயிர்கள் குறித்தும் சர்வதேச அமைப்புகளும் உயர் பிரமுகர்களும் தனிப்பட்ட செல்வாக்குடைய முக்கியஸ்தர்களுமென பல தரப்பினரும் தங்களின் கரிசனையை சுட்டிக் காட்டியபோதும் அவற்றையெல்லாம் சீரியஸாக எடுக்காமல், பொத்தாம்பொதுவான கருத்துகளை மட்டும் இலங்கையிடம் கூறிவிட்டு தமிழர் இனப்படுகொலையை நடக்கவிட்டு இரசித்தவர் இந்த பான் கி மூன். உயிரிழப்புகளை தடுத்திருக்கலாம் என்று பின்னாளில் அவர் ஒப்புதல் வாக்குமூலம் அளித்திருப்பதுவும் அதன் அடிப்படையில்தான்.

வட கொரிய அணு ஆயுத உற்பத்தி சம்பந்தமான ஆறு நாடுகள் பேச்சுவார்த்தையில் ஒரு காலத்தில் பங்கேற்ற இவர் உலகில் மரண தண்டனைகள் நிறுத்தப்படவேண்டும் என வலியுறுத்தி வந்தவர். ஆனால், ஈராக் தலைவர் சதாம் ஹுஸைனின் மரணதண்டனையை இடைநிறுத்த ஆக்கபூர்வமான முயற்சிகளை எடுக்காததன் மூலமே இவரின் மேற்குலக ஆதரவு சாயல் வெளிப்பட்டது. அது இன்றுவரை தொடர்வதால்தான் பதவிக்காலத்தின் பின்னரும் மூன் தனது புதிய பதவியின் வேலைக்காக இலங்கை வர முடிகிறது. இந்தளவு உயிரிழப்புகளுக்கு நானும் ஒரு காரணமே என்ற குற்றவுணர்ச்சி இல்லாமல் சகஜமாக எல்லோருடனும் உறவாட முடிகிறது.

பான் கி மூன் இலங்கை வருவதோ அல்லது அவரின் விஜயமோ எமக்குப் பொருட்டல்ல. ஆனால், தமிழர் உயிரிழப்புக்கான பொறுப்பை எப்படி இலங்கை அரசாங்கம் ஏற்கவேண்டுமோ அதேயளவு பொறுப்பு பான் கி மூனுக்கும் உண்டு. ஐக்கிய நாடுகள் சபை என்பது தலையாட்டி பொம்மை என்பது இலங்கை, ஈராக் முதல் இப்போது உக்ரைன் வரை பகிரங்கமாக தெரிந்த விடயம் என்றாலும் மனித உயிர்கள் இழப்பில் சமரசம் செய்துகொள்ள அதுவென்ன கடவுளின் சபையா என்பதை வினவவேண்டியுள்ளது.

2016ஆம் ஆண்டு இலங்கை வந்தபோது, இறுதிப்போர் தொடர்பில் ஒப்புதல் வாக்குமூலம் அளித்த பான் கி மூன் இன்று இலங்கை தனது பொறுப்புக்கூறலில் இருந்து தவறியமையை உணர்ந்து, அறிந்து அது தொடர்பாகவும் முடிந்தால் உரிய தரப்புகளிடம் சுட்டிக்காட்ட வேண்டும்.

பான் கி மூன் 1970ஆம் ஆண்டு தென்கொரிய சியோல் தேசிய பல்கலைக்கழகத்திலிருந்து, சர்வதேச உறவுகள் பாடத்தில் இளநிலைப் பட்டம் பெற்றவர். பின்னர் 1985ஆம் ஆண்டு ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தின் ஜோன் எவ்.கென்னடி அரசாட்சி கல்லூரியின் பொது ஆட்சி பாடத்தில் முதுகலைப் பட்டம் பெற்றவர். தேவையானால் இலங்கைக்கு அவர் ஜனநாயக ஆட்சி தொடர்பில் சில ஆலோசனைகளையும் கூறலாம்.

இலங்கை இனப்படுகொலை தொடர்பில் கைகட்டி, செவிகளை மூடி, வாயே திறக்காமல் பான் கி மூன் எப்படி நடந்துகொண்டாரோ, அப்படியே 2009 போர் முடிவுக்குப் பின்னர் இலங்கையும் நடந்துகொண்டு வருகிறதென்பதை அவர் உணரவேண்டும். தனது கையாலாகாத்தனத்தால் ஏற்பட்ட பேரழிவுக்கு பொறுப்பேற்று அதற்கு பிராயச்சித்தமாக இலங்கையின் அரசியல் தீர்வு முயற்சிகள் நிறைவேறி தமிழருக்கு நிரந்தர முடிவொன்று கிடைக்கும் முயற்சிகளுக்காவது அவர் ஒத்தாசை, ஆதரவை வழங்கவேண்டும். ஐ.நா. பொதுச் செயலாளர் பதவியில் இருந்தே எதையும் சாதிக்க முடியாமல்போன அவரால் இது சாத்தியமா என்பது தெரியவில்லை. பான் கி மூன் மனசாட்சியுடன்தானா இலங்கை வந்துள்ளார் என்பதைக் கேட்பதைத் தவிர வேறு எந்தக் கேள்வியும் எம் மனதுள் எழவில்லை!

எந்த ஒரு விலங்கோ, பறவையோ தன் பிள்ளைகள் தன்னைவிடச் சிறந்த வாழ்வு வாழ வேண்டும், தன்னைவிட அதிக சக்தி வாய்ந்ததாக இருக்க வேண்டும் என்று பாடுபடுவதில்லை. தன்னை வயதான காலத்தில் காப்பாற்ற வேண்டும் என்று எதிர்பார்ப்பதும் இல்லை.

தன் எதிர்பார்ப்புகளையும் எதிர்காலத்தையும் தன் குழந்தைகள் மீது வைக்கும் இனம் மனித இனம் மட்டுமே. எனவே, குழந்தை வளர்ப்பு என்பது இன்றைய காலகட்டத்தில் ஒரு சவாலாக மாறி உள்ளது. வீட்டில் பத்து குழந்தைகள் இருந்தாலும் சிறப்பாக வளர்த்தெடுத்தது அந்தக் காலம். இன்று, இருக்கும் ஒரே குழந்தையை நல்ல முறையில் வளர்க்க வேண்டும் எனும் பதற்றத்தில் பெற்றோர்கள் இருக்கிறார்கள்.

குழந்தைகள் என்றும் கொண்டாடப்பட வேண்டியவர்கள்தான். ஆனால், சமுதாயமும் பெரும்பாலான வீடுகளில் அறைக்கு அறை தொலைக்காட்சி. அறிவியல், பிள்ளைகளின் அறிவை விசாலமாக்கியது. அனுபவத்தை பூஜ்ஜியம் ஆக்கியது.

அதிகமாக கைபேசி பயன்படுத்தும் குழந்தைகளின் பேச்சுத்திறன் பாதிப்புக்குள்ளாகிறது என்று ஆய்வு முடிவு கூறுகிறது. மேலும், அமெரிக்காவில் 260 குழந்தைகளிடம் நடத்தப்பட்ட ஆய்வில் 37 % குழந்தைகள் கைபேசியைப் பார்த்துக் கொண்டே சாப்பிடும் பழக்கத்தைப் பெற்றுள்ளனர். மேலும், குழந்தை கருவிலிருக்கும்போதே தம் ஆளுமையை காட்டத் தொடங்கி விடுகின்றன மின்னணு சாதனங்கள்.

கடந்த 2018இல் டக்கேஜ் என்பவர் நடத்திய ஆய்வின்படி, கர்ப்பிணிகளின் கைப்பேசி பயன்பாடு, கருவின் வெப்பநிலையை மாற்றும் தன்மையை உடையது என்று தெரியவந்துள்ளது.

சரிவைக் கண்டுள்ளது. சூரிய ஒளியே படாத காரணத்தால் பெரும்பாலான குழந்தைகளுக்கு விற்றமின் டி குறைபாடு ஏற்பட்டுள்ளது.

ஒரு குழந்தைக்கு சரிவிகித உணவு எத்தனை அவசியமோ, அத்தனை அவசியமானது சரிவிகித உணர்வும். கேட்டதெல்லாம் கொடுக்க வேண்டும் என்ற பெற்றோரின் உணர்வு, கேட்டது அனைத்தும் கிடைத்துவிடும் என்ற உணர்வைக் குழந்தைகளிடம் ஏற்படுத்தி விடுகின்றது. நினைத்தது கிடைக்கும்போது வரும் மகிழ்வையும் கிடைக்காதபோது வரும் ஏமாற்றத்தையும் பெற்றோர் பழக்க வேண்டியது அவசியம்.

பாடசாலைகளில் நடைபெறும் பெற்றோர் - ஆசிரியர் சந்திப்பில் முன்னுரிமை தரப்பட வேண்டியது மாணவர்களின் ஒழுக்கத்திற்குத்தான். வாழ்வில் எந்த சூழ்நிலையையும் சமாளிக்கும் திறமையே ஒரு குழந்தையின் மிகப்பெரும் பலம்.



# பெற்றோரே ஆசான்கள்!

பெற்றோரும் அவர்களைப் புரிந்து கொள்ள வேண்டும். பெற்றோர் தங்கள் ஆசைகளைப் பிள்ளைகளின் மீது திணிக்கும் போதும் மற்ற பிள்ளைகளுடன் தம் பிள்ளைகளை ஒப்பிட்டுப் பேசும்போதும் பிள்ளைகள் தங்களின் தனித்திறனை இழந்து பிறரின் நகல்களாக உருமாறி விடுகின்றனர்.

படித்ததை நினைத்துப் பார்த்து ஒப்புவிக்க வேண்டிய வயதில், சதுரங்கத் தந்திரங்களைத் திட்டமிட அனுமதிக்கப்பட்ட காரணத்தால்தான் பிரக்ஞானந்தா சதுரங்க விளையாட்டில் நட்சத்திரமாக ஜொலிக்கிறார். எழுதுகோல் பிடிக்கும் கரங்களில் இசைக்கருவியுடன் இணைந்து பேசும் அழகை அனுமதித்ததால் இன்று லிடியன் நாதஸ்வரத்தின் பியானோ ரீங்காரத்தில் நம் மனம் நெகிழ்கிறது.

குழந்தைகளின் பலத்தையும் பலவீனத்தையும் பெற்றோர் அறிந்து கொண்டால் அவர்களை வழிநடத்துவது சுலபம். ஆனால், அதனைக் கண்டறிவதுதான் சவாலான காரியம். ''உன் நண்பர்களைக் காட்டு, நீ யார் என்பதைக் கூறுகிறேன்'' என்று கூறியது அக்காலம். ''உன் கைபேசியைக் காட்டு, உன் அழைப்பின் சரித்திரத்தைக் கொண்டு, இணையத்தில் உன் தேடலைக் கொண்டு நீ யார் என்பதை கூறுகிறேன்'' என்று சொல்வது இக்காலம்.

சென்ற நூற்றாண்டின் குழந்தைகள் அறிந்திராதவை தொலைக்காட்சி, கைபேசிகளின் பயன்பாடு. ஒரு தொலைக்காட்சிப் பெட்டியில், ஒரு தெருவில் இருக்கும் அனைவரும் அமர்ந்து படம் பார்த்தது அந்த நாள் ஞாபகம். இன்று இன்றைய குழந்தைகளின் கைகள் அதிகம் பயணிப்பது இணையத்தில்தான். கனடாவில் நடத்தப்பட்ட ஆய்வின்படி இரண்டு மணிநேரத்திற்கு மேலாக மின்திரையில் நேரம் செலவிடும் குழந்தைகள் 'அட்டென்ஷன் டெஃபிஸிட் ஹைப்பரெக்டிவிட்டி டிஸ்ஓடர்' (ADHD) குறைபாட்டுக்கு ஆளாவதாகத் தெரியவந்துள்ளது.

நோய்த்தொற்று காலத்தில் இணையவழியில் நடந்த கல்வி வகுப்புகள், குழந்தைகள் அதிக நேரம் கைபேசியையும் கணினியையும் பயன்படுத்த வேண்டிய நிர்ப்பந்தத்தை உருவாக்கிவிட்டன. கைபேசிக்கும் கணினிக்கும் அடிமையான குழந்தைகளுக்கு அதனால் ஏற்பட்ட உடல்நல, மனநல பாதிப்புகள் ஏராளம்.

குழந்தைகளை ஒரு நாளைக்கு ஒரு மணிநேரம்தான் மின்னணு சாதனங்களைப் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும் என்றும், இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகள் மின்னணு சாதனங்களைப் பயன்படுத்த அனுமதிக்கக் கூடாது என்றும் உலக சுகாதார ஸ்தாபனம் அறிவுறுத்தியுள்ளது.

நிலவும் சூரியனும் இன்று சிலர் வீட்டில் எட்டிப் பார்ப்பதே இல்லை என்பதே யதார்த்தம். இன்றைய இளைய தலைமுறைக்கும் இயற்கையான சூரிய ஒளிக்கும் இடையே குளிரூட்டிகள் அமைத்திருக்கும் திரை வலிமையான கோட்டையாக மாறிக் கொண்டிருக்கிறது. நாகரிகம் என்ற பெயரில் இன்றைய குழந்தைகளின் ஆரோக்கியம் பெருமளவு

ஐந்து வயது வரை உள்ள குழந்தைகளுக்கு, அவர்களின் பெற்றோரே சிறந்த விளையாட்டு பொம்மை. அதன்பின்னர், குழந்தைகளின் தேவை, அவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளும் நல்ல தோழன். பிள்ளைகள் எப்படி வளர வேண்டும் என்று பெற்றோர் நினைக்கிறார்களோ, அதுபோல் தாங்களே வாழ்ந்து காட்டுவது உத்தமமான செயல். உண்ணும்போது,

மின்னணு சாதனங்களைத் தள்ளி வைத்தல், ஒரு நாளைக்கு ஒரு மணிநேரமாவது படித்தல், ஆரோக்கியமான உணவு உண்ணுதல், உடற்பயிற்சி செய்தல், வீட்டு வேலைகளைப் பகிர்ந்துகொள்ளுதல் என அனைத்தும் பெற்றோரிடமிருந்தே பிள்ளைகளுக்கு வரும்.

பிள்ளைகளுக்காக காப்பீடு என்ற பெயரில் சேமிக்கும் பெற்றோர் புரிந்து கொள்ள வேண்டியது உண்மையான குடும்பத்திற்கான காப்பீடு என்பது குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து பேசி மகிழும் நேரமே ஆகும். மின்னணு சாதனங்களைத் தள்ளி வைத்துவிட்டு நாம் நம் குடும்பத்துடன் மகிழ்வாக செலவிடும் நேரம் அற்புதமானது. பெற்றோர் பிள்ளைகளுக்குப் பாடமாக வாழவேண்டும் என்பதே நாம் அறிந்து கொள்ள வேண்டிய அரிய பாடம்.

**முனைவர் த.லாவண்ய சோபனா**

**நன்றி - தினமணி**

# ரொம்ப நாள் வாழ ஆசையா? ஐந்தே விடயங்கள் போதும்!

நீண்ட நாள் வாழ வேண்டும் என்பது பலரின் ஆசைதான். ஆனால், நீண்ட நாள் ஆரோக்கியமாக வாழ வேண்டும் என்பதுதான் அறிவார்ந்தவர்களின் ஆசையாக இருக்கும்.

பல உடல் உபாதைகளுடன் இருப்பவர்களும்கூட, இந்த நோயெல்லாம் தீர்ந்து இன்னும் கொஞ்ச நாள் வாழ்ந்துவிட வேண்டும் என்றுதான் நினைப்பார்கள். தவிப்பார்கள்.

சரி, பலரும் விரும்பும் நீண்ட ஆரோக்கிய வாழ்க்கையைக் கைக்கொள்வது எப்படி?

நீண்ட காலம் வாழ வேண்டியதை விடவும், நீண்ட காலம் ஆரோக்கியமாக வாழ வேண்டும் என்பதே அவசியம். எனவே, இவ்விரண்டையும் சாகும் காலத்தில் போய் தேடக் கூடாது.

அந்த காலத்தை அடைவதற்கு முன்பே, அதாவது உயரம் தாண்ட எப்படி தூரத்திலிருந்து ஓடி வருகிறோமோ, அப்படி நாமும் இளமையிலிருந்தே இந்த ஐந்து விடயங்களைக் கட்டாயம் பின்பற்றினால் நிச்சயம் வயதில் சதமடிக்கலாம், மருத்துவமனைக்குப் போகாமலே.

**1. மன நிம்மதி**

என்னடா... எடுத்த எடுப்பிலேயே மன நிம்மதி என்று சொல்கிறார்களே என எண்ண வேண்டாம். அதுதான் இப்போதைய நிலையில் மிக பெறுமதியானது . எவ்வளவு செலவிட்டாலும் கிடைக்காத அரிதானதாகவும் மாறிவிட்டது.

எதற்கும் கோபப்படாதீர்கள். அளவுக்கு அதிகமாக கோபப்படாதீர்கள். கோபமே படாதீர்கள். யாரையும் மதிப்பிடாதீர்கள். யாரையும் வெறுக்காதீர்கள். பொறாமைப் படாதீர்கள். எதைப் பற்றியும் கவலைப்படாதீர்கள். இவையெல்லாம் சாத்தியமானால் மன நிம்மதி இதோ என்று ஓடோடி வந்து உங்களிடம் உட்கார்ந்து கொள்ளும்.

**2. ஆரோக்கியமான உணவு**

இது எங்கே கிடைக்கும் என்று கேட்கும் தலைமுறைதான் இப்போது உருவாகிக் கொண்டே இருக்கிறது. சாப்பிடுவது கொஞ்சமாக இருந்தாலும் அது ஆரோக்கியமானதாக இருக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள். ஒரு வேளை உணவாவது வீட்டில் சமைத்த, நல்ல காய்கறிகளைக் கொண்டதாக இருக்கட்டும்.

ஆரோக்கியமான சாப்பாடு பற்றி யாருக்கும் எதுவும் சொல்லத் தேவையே இல்லை. எல்லோருக்குமே தெரியும். யாராலும் சாப்பிடத்தான் முடியவில்லை.

**3. உடல் இயக்கம்**

உழைப்போ அல்லது பயிற்சியோ அல்லது ஊர் சுற்றுகிறீர்களோ... உடல் இயக்கம் சீராக இருக்கும்படி உங்கள் வாழ்க்கை முறையை வைத்துக் கொள்ளுங்கள். அதிகம் நடக்கவும். அதிகம் ஓடவும் சைக்கிள் ஓட்டவும் அதிகம் உழைக்கவும் முனையுங்கள். முடிந்தால்... உங்கள் விருப்பமும் சாத்தியமே.

**4. உடல் எடை**

உங்கள் உடல் உயரத்துக்கு ஏற்ற உடல் எடையை கண்டறிந்துகொள்ளுங்கள். மிகத் துல்லியமாக அதே அளவில் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. கூடக் குறைய இருக்கலாம். எடை அதிகமாக இருக்கிறோம் என்று எதையும் சாப்பிடாமல் மெலிவதோ, ஒல்லியாக இருக்கிறோம் என்று கவலைப்பட்டு தலைமுடியைக் கொட்ட விடுவதோ வேண்டாம். ஆனால், உடல் எடையை அதிகரிக்காமல் காத்துக் கொள்ளுங்கள். இருந்தால் மட்டும் குறைத்துக் கொள்ளுங்கள்.

**5. தீய பழக்க வழக்கம்**

புகை முதல் மது வரை தீய பழக்க வழக்கங்களை ஒழித்துவிடுங்கள். ''இல்லைங்க. விடவே முடியவில்லை'' என்றால் அளவோடு என்றும் சொல்ல முடியாது. ஏனெனில், கெட்டதுக்கு எப்படி இருக்கும் அளவு..?

ஆனால், உங்களுக்கு நீங்கள் விதித்துக் கொள்ளும் விதிமுறையின்படி மிகக் குறைந்த அளவில் தீய பழக்கங்களை மெல்லக் குறைத்து, அதற்குப் பழகிவிட்ட பிறகு அதனை மறக்க முயலுங்கள். அதிலும் எந்தக் கட்டாயமும் வேண்டாம்.

இந்த ஐந்து பழக்கங்கள்தான் நீண்ட ஆயுளுக்கு அடிப்படைக் காரணங்களாக அமைகின்றன. இதில் சுவாரஸ்யமான தகவல் என்னவென்றால், இந்த ஐந்து விடயங்களில் ஏதேனும் ஒன்றை மட்டும் கட்டாயமாகப் பின்பற்றினாலே ஒரு மனிதனின் ஆயுள் குறைந்தபட்சம் இரண்டு ஆண்டுகள் அதிகரிக்குமாம். அனைத்தையும் கைக்கொண்டால் நிச்சயம் 100 வயதை எட்டலாம் என்பது திண்ணம்.

# இன்றைய நாளில்..

- 1971 – சுவிட்சர்லாந்தில் பெண்களுக்கு வாக்குரிமை கிடைத்தது.
- 1977 – சோவியத் ஒன்றியம் சோயூஸ்-24 விண்கலத்தை இரண்டு விண்வெளி வீரர்களுடன் விண்ணுக்கு ஏவியது.
- 1979 – நெப்டியூனின் சுற்றுப் பாதைக்குள் புளூட்டோ நுழைந்தது.
- 1992 – ஐரோப்பிய ஒன்றியம் அமைப்பதற்கான மாஸ்ட்ரிக்ட் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.
- 1999 – உலகத் தமிழ் இணைய மாநாடு சென்னையில் ஆரம்பமானது.
- 2005 – விடுதலைப் புலிகளின் மட்டு. - அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உட்பட 4 விடுதலைப் புலிகள் இலங்கை இராணுவ தாக்குதலில் கொல்லப்பட்டனர்.

## நக்கல் நமசிவாயம்

**பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு, தேர்தல் ஆணைக்குழு எண்டு அதெல்லாத்தையும் பிரிச்சுப் போட்டு நாட்டைப் பிரிக்க மாட்டன் எண்டு சொல்லுறார் ரணில் ஐயா..!**



# நீதியரசர்கள் மூவருக்குப் பதவி உயர்வு

## ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம்







மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர், நீதியரசர் கே.பி பெர்னாண்டோ உயர் நீதிமன்ற நீதியரசராக நேற்று (06) காலை கொழும்பு, கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இதேவேளை, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் நிஸ்ஸங்க பந்துல கருணாரட்ன மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவராகவும் மேல் நீதிமன்ற நீதிபதி எம்.ஏ.ஆர்.மரிக்கார் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராகவும் ஜனாதிபதி முன்னிலையில் நேற்று (06) சத்தியப் பிரமாணம் செய்துகொண்டனர்.

நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, முப்படைத் தளபதிகள் உள்ளிட்ட பல அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# மூலப்பொருட்களின் தட்டுப்பாடு காரணமாக 2000 கட்டுமானப் பணிகள் இடைநிறுத்தம்

## 10 இலட்சத்துக்கும் அதிகமானோர் தொழில் இழப்பு



மூலப்பொருட்களின் தட்டுப்பாடு மற்றும் விலைவாசி உயர்வு காரணமாக அடுக்குமாடி குடியிருப்புகள் உட்பட கிட்டத்தட்ட 2000 பாரிய கட்டுமானப் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நெருக்கடியான சூழ்நிலையை கருத்திற்கொண்டு, கட்டுமானத் துறைக்கு அரசு சிறப்பு ஆதரவை வழங்கவேண்டுமென கட்டுமானத் துறை தொழிலதிபர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அடுக்குமாடி குடியிருப்புகளில் வீடுகள் வாங்குவது சுமார் 80 சதவீதம் குறைந்துள்ளதால் கிட்டத்தட்ட 200 தொழிலதிபர்கள் கடும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதற்கிடையில், கட்டுமானத் தொழிலில் ஏற்பட்டுள்ள நெருக்கடியால், கொத்தனார், உதவியாளர்கள், கட்டுமானப் பொருட்கள் வழங்குவோர் உள்ளிட்ட 10 இலட்சத்துக்கும் அதிகமானோர் தொழில் இழந்துள்ளதாக தேசிய கட்டுமான சங்கம் தெரிவித்துள்ளது.

கட்டுமானப் பொருட்களின் விலை உயர்வால், கிட்டத்தட்ட 5000 விநியோக ஏஜென்சிகள் முற்றிலுமாக இல்லாமல் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் அந்த நிறுவனங்களில் பணிபுரிந்த இலட்சக்கணக்கானோரின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கட்டுமானப் பொருள் விநியோக ஏஜென்சிகள் வசம் உள்ள லொறி, ரிப்பர், பெக்ஹோ இயந்திரம் போன்ற வாகனங்களை பராமரிக்க முடியாமல் விற்பனை செய்வதாகவும் தெரிவிக்கின்றனர்.

சீமெந்து, இரும்பு உள்ளிட்ட நிர்மாணப் பொருட்களின் பற்றாக்குறையே நிர்மாணத் தொழில் வீழ்ச்சிக்கு முக்கிய காரணம் என அத்துறையைச் சேர்ந்த வர்த்தகர்கள் மேலும் சுட்டிக்காட்டுகின்றனர்.

# பயாகல கடற்கரையில் நீராடச்சென்ற மஸ்கெலிய இளைஞர் மாயம்

பயாகல தியலகொட கடற்கரையில் நீராடச் சென்ற இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார்.

பயாகல தியலகொட கடற்கரையில் நான்கு இளைஞர்கள் நேற்று முன்தினம் (05) மாலை 5.45 மணியளவில் நீராடச் சென்றுள்ளனர்.

அவர்களில் ஒருவர் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார்.

மஸ்கெலியா பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய நபரே இவ்வாறு நீரில் மூழ்கி காணாமல்போயுள்ளார்.

இவர்கள் பொரலஸ்கமுவ பிரதேசத்தில் உள்ள தொழிற்சாலை ஒன்றில் பணிபுரிவதாக தெரிவிக்கப்படுகிறது.

# ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட உப தலைவர் சுஜீவ சேனசிங்க பேருவளைக்கு விஜயம்





(பேருவளை பீ.எம்.முக்தார்)


ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட உப தலைவராக நியமிக்கப்பட்ட முன்னாள் எம்.பி. சுஜீவ சேனசிங்க நேற்று முன்தினம் (05) பேருவளைக்கு விஜயம் செய்தார்.

சர்வதேச இரத்தினக்கல் வர்த்தக சந்தையாகத் திகழும் சீனன்கோட்டை பத்தை இரத்தினக்கல் வர்த்தக சந்தைக்கு முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினர் இப்திகார் ஜமீல் சகிதம் சமுகமளித்த அவர், இரத்தினக்கல் வியாபாரிகளையும் சந்தித்து அவர்கள் எதிர்நோக்கும் பல்வேறுபட்ட பிரச்சினைகளையும் கேட்டறிந்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தர் இபாம் ஹனபியின் இல்லத்தில் அவர் கட்சி முக்கியஸ்தர்களையும் சந்தித்தார்.

பேருவளை நகர சபையை இம்முறை வெற்றிபெறச்செய்ய மூவின மக்களும் ஐக்கிய மக்கள் சக்தியின் கீழ் அணிதிரண்டுள்ளமை குறித்து தலைமை வேட்பாளர் இப்திகார் ஜமீல், சிரேஷ்ட உப தலைவர் சுஜீவ சேனசிங்கவிடம் சுட்டிக்காட்டினார்.

# காஷ்மீர் நட்புறவு தினத்தை முன்னிட்டு கருத்தரங்கு மற்றும் புகைப்படக் கண்காட்சி






(அஷ்ரப் ஏ சமத்)

காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தில் பாகிஸ்தானின் நிபந்தனையற்ற ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்தும் வகையில், "காஷ்மீர் நட்புறவு தினத்தை" முன்னிட்டு கருத்தரங்கு மற்றும் புகைப்படக் கண்காட்சி ஒன்றை கொழும்பிலுள்ள பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயம் நேற்று (06) ஏற்பாடு செய்திருந்தது.

இந்த விழாவில், பல வெளிநாட்டுத் தூதுவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பாகிஸ்தான் சமூகத்தினர், காஷ்மீர் நலன்விரும்பிகள் மற்றும் இலங்கையின் ஊடக பிரதிநிதிகளும் கலந்து சிறப்பித்தனர்.

பாகிஸ்தான் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சரின் காஷ்மீர் நட்புறவு தின செய்திகள், பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயத்தின் வர்த்தக இணைப்பாளர் மற்றும் ஊடக இணைப்பாளரால் முறையே வாசிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் முக்கிய பேச்சாளர்களாக ஷிராஸ் யூனாஸ், பொருளாதார அபிவிருத்தி ஆலோசனைக் குழுவின் சபை உறுப்பினர் மற்றும் திருமதி சூரியா ரிஸ்வி, செயலாளர் இளம் முஸ்லிம் பெண்கள் சங்கம் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

பயனுள்ள உரையாடல் மூலம் காஷ்மீர் பிரச்சினைக்கு அமைதியான தீர்வினை வலியுறுத்திய அனைத்து பேச்சாளர்களும் சமய நல்லிணக்கம் மற்றும் அனைவரினதும் அமைதியான சகவாழ்வின் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தனர். மேலும், இந்தியா சட்டவிரோதமாக ஆக்கிரமித்துள்ள ஜம்மு-காஷ்மீரில் இந்தியப் படைகள் மேற்கொள்ளும் மனித உரிமை மீறல்கள் குறித்தும் அவர்கள் கவலை தெரிவித்தனர்.

# ஐந்து இலட்சம் பாக்கு மரக் கன்றுகளை வளர்க்க திட்டம்

நாடு முழுவதும் இரண்டு ஆண்டுகளுக்குள் ஐந்து இலட்சம் பாக்கு மரக்கன்றுகளை வளர்க்கும் திட்டத்தை, நாட்டின் முன்னணி விவசாய ஏற்றுமதி நிறுவனமான நோர்த் வெஸ்ட் குரூப் ஆரம்பித்துள்ளது.

பாக்கு சாகுபடிக்கு ஏற்ற பகுதிகளை தெரிவுசெய்து, இந்தத் திட்டம் வடமேல் மாகாணத்தில் பெருந்தோட்ட கைத் தொழில் மற்றும் விவசாய அமைச்சுகளின் வழிகாட்டுதலின் கீழ் செயல்படுத்தப்படுகிறது.

பாக்கு மற்றும் கருங்கா ஆகியவை இலங்கையின் ஏற்றுமதி பயிர்களாகும், ஆசிய பிராந்தியத்தில் கருங்காவின் தேவைக்கேற்ப, இலங்கையில் பேரீச்சம்பழத்தின் வருடாந்த விளைச்சல் நான்கு மடங்கு அதிகரிக்கப்பட வேண்டும், அடுத்த ஆறு வருடங்களில் உள்ளூர் விளைச்சலை மேலும் அதிகரிப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கமென வடமேற்கு குழுமத்தின் விவசாய திட்டப் பணிப்பாளர் நிமல் வீரதுங்க தெரிவித்தார்.

இந்தியா, பாகிஸ்தான், மத்திய கிழக்கு போன்ற நாடுகளுக்கு பாக்கு இறக்குமதி செய்ய முடிந்தால், ஆண்டுதோறும் 10 மில்லியன் டொலர் அந்நிய செலாவணியை ஈட்டமுடியும், மேலும் விவசாயிகளும் அதிக விலையைப் பெற முடியுமென்று அவர் குறிப்பிட்டார்.

தோட்ட மட்டத்தில் இந்த பாக்கு மரங்களை வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், அறுவடையை கொள்வனவு செய்வதற்கு வர்த்தக உடன்படிக்கை முறையை அறிமுகப்படுத்தவும் அந்நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

# புதையல் தோண்டிய மூவர் தம்பகல்லையில் கைது

(கெலும் குணதிலக்க)

தம்பகல்ல கல்பொக்க பிரதேசத்தில் தனியார் காணி ஒன்றில் புதையல் தோண்டிய மூவர் நேற்று முன்தினம் (05) தம்பகல்ல பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தம்பகல்ல பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் குறித்த மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புதையல் தோண்டுவதற்குப் பயன்படுத்தப்படும் பெக்ஹோ இயந்திரம் உள்ளிட்ட பல உபகரணங்களையும், சில யாகப் பொருட்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேகநபர்கள் 24, 30 மற்றும் 50 வயதுகளையுடைய மொனராகலை ஜயசெங்கம மற்றும் திஸ்ஸபுர பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள்.

சந்தேக நபர்களை மொனராகலை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# குருநாகலில் ஏ.ரி.எம். இயந்திரம் கொள்ளை



குருநாகல், கெட்டுவனாவில் உள்ள அரச வங்கியொன்றின் தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம் (ATM) இனந்தெரியாத நபர்களினால் கொள்ளையிடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் கடந்த சனிக்கிழமை (04) காலை 09.30 மணியளவில் பழுதுபார்ப்பவர்களாக காட்டிக்கொண்டு வந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த ஏரிஎம் குருநாகல் புகையிரத நிலையத்திற்கு எதிரே அமைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## 06.02.2023 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 136 2343 | 147 3014 |
| கனேடியன் டொலர் | 155 6421 | 167 248 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 41 0166 | 44 1387 |
| யூரோ | 275 2013 | 3 0 2581 |
| ஜப்பான் யென் | 1 60 4 | 1 7044 |
| சிங்கப்பூர் டொலர் | 16 30 5 | 170 454 |
| ஸ்ரேலிங் பவுன் | 320 884 | 336 77 2 |
| சுவிஸ் பிரான்ங் | 274 6 7 | 3 2 0410 |
| ஐ.அ.டொலர் | 248 8857 | 26 0721 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 85 284 |
| குவைட் | குவைட் தினார் | 0,075 445 |
| ஓமான் | ஓமான் றியால் | 83 0 31 |
| கட்டார் | கட்டார் றியால் | 88 1 65 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 3444 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 4321 |

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
ஞாயிற்றுக்கிழமை 2023.02.05
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5022 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 24,336,404.00
ஆங்கில எழுத்து V — வெற்றி இலக்கங்கள் 0 5 4 2 7 1

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3264 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 76,638,076.80
ஆங்கில எழுத்து U — வெற்றி இலக்கங்கள் 01 12 46 77

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 1477 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,151,502.40
வெற்றி இலக்கினம் — வெற்றி இலக்கங்கள் 0 2 9 1 3 9

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1052 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 82,042,982.40
ஆங்கில எழுத்து Q — வெற்றி இலக்கங்கள் 16 22 53 66

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 331 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,509,905.40
வெற்றி இலக்கினம் துலாம் — வெற்றி இலக்கங்கள் 08 49 54 59 — விசேட இலக்கினம் துலாம்

மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1370 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 298,133,318.00
ஆங்கில எழுத்து R — சுப்பர் இலக்கம் 10 — வெற்றி இலக்கங்கள் 11 53 56 70
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிரான்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# சிவாகம வேத பாடசாலை - திருமறைப் பண்ணிசைக் கல்லூரி அங்குரார்ப்பணம்







(மன்னார் நகர் நிருபர்)

திருக்கயிலாய பரம்பரை தருமை ஆதீனமும் திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச் சபையும் இணைந்து ஆரம்பித்துள்ள சிவானந்த குருகுலம் எனும் பேரிலான சிவாகம வேத பாடசாலையும், திருமறைப் பண்ணிசைக் கல்லூரியும் நேற்று முன்தினம் (05) காலை வைபவரீதியாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் தைப்பூச நாளில் காலை 10 மணியளவில் மேற்படி சிவானந்த குருகுலம் ஆலய வளாகத்தில் ஆலய திருப்பணிச் சபையின் தலைவர் சிவத்திரு ராகவன் தலைமையில் தருமை ஆதீன 27ஆவது குரு மகா சந்நிதானம் சிவஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளினால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இதன்போது தருமை ஆதீன திருக்கேதீஸ்வர கிளை மட கட்டளை தம்பிரான் ஸ்ரீமத் மீனாட்சி சுந்தரத் தம்பிரான் சுவாமிகள், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் சற்குணராஜா, பேராதனை பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் ஏ.அனுசாந்தன் உட்பட பலர் கலந்துகொண்டிருந்தனர். இக்குருகுலத்தில் இணைந்து கற்க விரும்புவர்களும் வருகை தந்து குருகுல மாணவர்கள் சேர்க்கை தொடர்பாக தரவுகளை அறிந்து கொண்டுள்ளனர்.

மேலும் சிவாகமம், வேதம், திருமுறை பயில விரும்பும் சிவச்சார்ய மரபுடையோரும் சைவ குருமார்களும் திருமுறைப் பண்ணிசை பயில விரும்புவோரும் விண்ணப்பிக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. மேலும் பயிற்சி மாணவர்களுக்கு தங்குமிடமும் உணவு கல்வியும் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

## 78 போத்தல் சாராயம் – 120 ரின் பியர்களுடன் ஒருவர் கைது




(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்திற்கு அருகாமையிலுள்ள வீடொன்றிலிருந்து நேற்று முன்தினம் போயாதினத்தன்று பிற்பகல் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த பெருமளவான சாராயப் போத்தல்கள் மற்றும் பியர் ரின்கள் மாவட்ட குற்றப் பிரிவுப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மாவட்ட குற்றப்பிரிவு பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் நீண்டகாலமாக சட்ட விரோதமான முறையில் மதுபானம் விற்று வந்த நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் பணிப்புரைக்கமைவாக, மாவட்ட குற்றப்பிரிவு உபபொலிஸ் பரிசோதகர் பிரதீப் தலைமையிலான குழுவினர் குறித்த கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர். இதன்போது 78 போத்தல் சாராயம் மற்றும் 120 பியர் ரின்கள் கைப்பற்றப் பட்டிருப்பதுடன், சந்தேக நபர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

# யாழில் தைப்பூசத் திருவிழா




யாழ்ப்பாணம் இணுவில் அருள்மிகு கந்தசுவாமி கோவிலில் தைப்பூசத் திருநாளை முன்னிட்டு உலகப்பெருமஞ்சம் நேற்று முன்தினம் (05) வீதியுலா வந்தது. வள்ளி, தெய்வானை சமேத ஆறுமுகப்பெருமான் மஞ்சத்தில் பவனி வந்தார். இதனைக் காண்பதற்காக அடியவர்கள் பலர் யாழ். குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் இணுவையம்பதி வந்து சேர்ந்தார்கள். (யாழ். நிருபர்)




சைவ தமிழ்க் கடவுளான முருகப்பெருமானின் திருவிழாக்களில் முக்கியமான தைப்பூச திருவிழா நேற்று முன்தினம் (05) மாலை யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. நல்லூர் கந்தன் மஞ்சத்தில் எழுந்தருளி பக்த கோடிகளுக்கு அருள்பாலித்திருந்தார். (படங்கள்: யாழ். நிருபர்)

## ஹயஸ் வாகனத்துடன் மோட்டார்சைக்கிள் மோதி விபத்து; ஒருவர் உயிரிழப்பு

(யாழ். நிருபர்)



யாழ்ப்பாணம் தாவடி பகுதியில் நேற்று முன்தினம் மாலை மோட்டார் சைக்கிள் மற்றும் ஹயஸ் வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மற்றொரு இளைஞர் ஆபத்தான நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மருதனார்மடம் பகுதியிலிருந்து கொக்குவில் நோக்கி 3 மோட்டார்சைக்கிள்கள் வேகமாக பயணித்ததாகவும் அதில் வந்த மோட்டார் சைக்கிளொன்று யாழ்ப்பாணத்திலிருந்து மருதனார்மடம் நோக்கி பயணித்த ஹயஸ் வாகனத்துடன் நேருக்கு நேர் மோதி இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் யாழ்.ஓட்டுமடம் பகுதியைச் சேர்ந்த அனுஜன் (வயது 19) என்ற இளைஞன் உயிரிழந்துள்ளார்.

ஜெயசீலன் ரகுசன் (வயது 17) என்ற இளைஞன் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

படுகாயமடைந்த இளைஞனுக்கு செயற்கை சுவாசம் வழங்கப்பட்டுவருவதாக கூறப்படுகிறது. சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# 199 வருடங்களாக புனரமைக்கப்படாத வீதியை கண்டும் காணாமலிருப்பது ஏன்?

## அரசியல்வாதிகளுக்கு எதிராக கம்பளையில் மக்கள் போராட்டம்




(கம்பளை மேலதிக நிருபர்)

கம்பளை பிரதேசத்தில் 199 வருடங்களாக புனரமைக்கப்படாத பாதை ஒன்று இருப்பதை வெளிக்காட்டவும் ஐந்நூறு குடும்பங்களுக்கு மேல் தினமும் பயன்படுத்தும் குறித்த வீதியினை புனர்நிர்மாணம் செய்யாது இம்முறை வாக்குக் கேட்டு ஊருக்குள் யாரும் வரவேண்டாம் என வலியுறுத்தியும் பிரதேசவாசிகள் கூடி கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றினை நேற்றுமுன்தினம் மேற்கொண்டனர்.

இலங்கையில் முதல் முறையாக 1824ஆம் ஆண்டு ஜோர்ஜ் பார்ட் என்பவரினால் கம்பளை சிங்ஹபிட்டியவில் கோப்பி பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டபோது அவற்றை அங்கிருந்து கம்பளை நகருக்கு எடுத்துச் செல்வதற்காக அமைக்கப்பட்ட ஐந்து கிலோமீற்றர் தூரம் கொண்ட மேற்படி பாதை இதுவரையில் புனர்நிர்மாணம் செய்யப்படாமல் இருப்பதாக மக்கள் குற்றஞ்சுமத்தினர்.

தினமும் இப்பிரதேசத்தில் இருந்து ஐயாயிரம் கிலோகிராம் வரை பறிக்கப்படும் தேயிலைக் கொழுந்து மற்றும் கோப்பி, கிராம்பு, மிளகு போன்ற விவசாய உற்பத்திப் பொருட்களையும் இப்பாதையூடாகவே கம்பளை நகருக்கு கொண்டு செல்ல வேண்டியுள்ளதெனவும் குறிப்பிட்டனர்.

மேலும், பாதை சீர்கேடு காரணமாக கோப்பி பயிர் செய்யப்பட்ட காலத்தில் ஜோர்ஜ்பார்ட் தங்கியிருப்பதற்காக கட்டப்பட்ட பங்களா வீடும் சிதைந்து கவனிப்பாரற்ற நிலையில் உள்ளதெனவும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் சுட்டிக்காட்டினர்.

# திருடச் சென்றபோது கைபேசியை வீட்டில் விட்டுச் சென்ற திருடன்

## நானுஓயா டெஸ்போர்ட் தோட்டத்தில் சம்பவம்

(செ.திவாகரன்)


திருடுவதற்காக வீடொன்றுக்குச் சென்ற திருடன் அங்கு தனது கையடக்கத் தொலைபேசியை விட்டுச் சென்ற சம்பவமொன்று நானுஓயா டெஸ்போர்ட் தோட்டத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

நானுஓயா டெஸ்போர்ட் தோட்டத்திலுள்ள வீட்டினுள் திருடும் நோக்குடன் ஒருவர் உள் நுளைந்துள்ளார்.

வீட்டினுள் திருடன் இருப்பதைக் கண்டு வீட்டு உரிமையாளர்கள் சத்தம் போட்டு அயலவர்களை அழைத்துள்ளனர். சத்தம் கேட்டு திருடன் வீட்டில் இருந்து தப்பியோடியுள்ளதுடன் அயலவர்கள் துரத்திச் சென்றபோது கையடக்கத் தொலைபேசி தவறுதலாக விழுந்துள்ளது.

வீட்டு உரிமையாளர்கள் கண்டெடுத்த கையடக்கத் தொலைபேசி மூலம் திருடனை அடையாளம் காண்பதற்கு நானுஓயா பொலிஸ் நிலையத்தில் அதனை ஒப்படைத்துள்ளனர்.

இவ்வாறு கண்டெடுக்கப்பட்ட கையடக்கத் தொலைபேசி கடந்த சனிக்கிழமை மாலை நானுஓயா மாகாஎலிய தோட்டத்தில் திருடப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அந்தத் தொலைபேசியுடன் 23 ஆயிரம் ரூபா பணமும் களவாடப்பட்டுள்ளதாக பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது. இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





தைப்பூசத்தை முன்னிட்டு தலவாக்கலை ஸ்ரீகதிரேசன் சுவாமி தேவஸ்தானத்தில் முத்தேர் பவனி நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ மு. பிரசாந்த் வாமதேவ சிவாச்சாரியார், மகோற்சவ பிரதம குரு ஸ்ரீ.மு.ப. முத்துகுமார சுவாமி சிவாச்சாரியார் மற்றும் உற்சவகால குரு சிவஸ்ரீ ஜெயராமநிதர்சன குருக்கள் ஆகியோரின் தலைமையில் பூஜைகள் இடம்பெற்றன. (படங்கள்: தலவாக்கலை செய்தியாளர்)

# சிவாநந்த நலன்புரி நிலையத்துக்கு கொட்டகலையில் அடிக்கல் நாட்டல்





(பத்தனை செய்தியாளர்)

இராமகிருஷ்ண மிஷன் சிவாநந்த நலன்புரி நிலையத்திற்கு கொட்டகலையில் அடிக்கல் நாட்டு வைக்கும் நிகழ்வு கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் சுவாமி ராஜேஸ்வரானந்த மஹாராஜ் தலைமையில் கொட்டகலை ஹரிங்டன் தோட்டத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

ஸ்ரீ ஸ்ரீராமகிருஷ்ணர் பூஜை, ஹோமம், ஆரத்தி, பஜனை ஆகியன இடம்பெற்று அடிக்கல் நாட்டும் வைபவம் ஆரம்பமாகியது.

இதன் போது பிரதம அதிதிகள் மேளதாள வாத்தியங்கள் இசை முழங்க கலை, கலாசார அம்சங்களுடன் வரவேற்கப்பட்டனர்.

இராமகிருஸ்ண மிஷனுக்கு ஸ்ரீமான் விஜயபாலன் ரெட்டியாரால் இரண்டு ஏக்கர் காணி வழங்கப்பட்டதுடன் அதிதிகள் பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டனர்.

இராமகிருஷ்ண மிஷன் இலங்கை கிளை நூற்றாண்டு நோக்கிய தனது ஆன்மீகமும் சமூக சேவையினையும் என்னும் சுவாமி விவேகானந்தரின் அடியொட்டிய பயணத்தில் கடந்த 96 ஆண்டுகளாக பெரும் பங்கினை ஆற்றி வருகிறது.

இராமகிருஷ்ண மிஷன் தனது சேவைப் பணிகளை விரிவுபடுத்தும் அடுத்த கட்ட நிகழ்வாக, ஈழ தேசத்தின் செழுமைமிக்க நுவரெலியா மாவட்டத்தில் கொட்டகலை பிரதேசத்தில், மலையக மக்களின் மேம்பாட்டுத்திட்டத்தினை முன்னெடுக்கும் வகையில் புதிய நலன்புரி நிலையம் உருவாக்க தீர்மானித்துள்ளது. இதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வே அன்றைய தினம் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு கண்டி இந்திய உதவி உயர்ஸ்தானிகராலயத்தின் இந்திய உதவி தூதுவர் கலாநிதி ஆதிரா, சங்கைக்குரிய திஸ்ஸமாராம தம்மஜோதி தேரர், ஸ்ரீமத் கொழும்பு ராமகிருஷ்ண மிஷன் சுவாமி ராஜேஸ்வரானந்த ஜீ மஹாராஜ், ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்த மஹாராஜ், மட்டக்களப்பு ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்தஜீ, இராமகிருஷ்ண தலைவர் உள்ளிட்ட சுவாமிகள்,, மதகுருமார்கள், சமூகவியலாளர்கள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# இரு குழந்தைகளை கொலைசெய்துவிட்டு தற்கொலை செய்துகொண்ட தந்தை





(மாவனெல்லை – சமன் விஜய பண்டார)

குடும்பத் தகராறின் காரணமாக நபரொருவர் தனது குழந்தைகள் இருவரை கொலை செய்துவிட்டு, தானும் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்ட சம்பவமொன்று நேற்று (06) அரநாயக்க பிரதேசத்தில் பதிவாகியுள்ளது.

9 வயது பெண் குழந்தையொன்றும் 6 வயது ஆண் குழந்தையொன்றுமே இவ்வாறு கொலைசெய்யப்பட்டுள்ளதுடன், சிறுவர்கள் இருவரும் உயிரிழந்திருந்த அதே இடத்தில், அவர்களின் தந்தையும் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டிருந்த நிலையில், மூவரும் சடலங்களாக நேற்று (06) மீட்கப்பட்டதாக அரநாயக்க பொலிஸார் தெரிவித்தனர்.

அரநாயக்க பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொல்ஹும்பேகொட, கொடிகமுவ பிரதேசத்தின் வயல்வெளிக்கு மத்தியில் இருக்கும் பழைமையான மடமொன்றிலேயே இந்த கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ள நிலையில், நேற்று முன்தினம் நள்ளிரவு அல்லது நேற்று அதிகாலை இந்தக் கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றிருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்திருக்கிறார்கள். இந்தச் சம்பவம் குறித்து தகவல் அறிந்த அந்த பிரதேச மக்கள் சம்பவ இடத்துக்கு திரண்டுவந்திருந்ததை அவதானிக்கக் கூடியதாகவும் இருந்தது.

இந்த மடம் அமைந்திருக்கும் வீதியிலிருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்தில் உயிரிழந்த குழந்தைகளின் தாயாரின் இல்லம் அமைந்துள்ளமை பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதுடன், 33 வயதுடைய தந்தை அந்த மடத்தின் கூரையில் தூக்கிட்டிருந்ததையும் அதே இடத்திலுள்ள தரையில் குழந்தைகள் இருவரும் உயிரிழந்திருந்துள்ளதையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. குழந்தைகளின் காலணிகள் மற்றும் அவர்களின் தந்தையின் பாதணிகள் ஒரே இடத்தில் குவிக்கப்பட்டிருந்ததுடன், தந்தை கொலைசெய்யப்பட்டிருந்த இடத்தில் அவரின் கைபேசியையும் அவதானிக்க முடிந்தது.

இந்தச் சம்பவம் குறித்து தகவல் கிடைத்தவுடன், சம்பவ இடத்துக்கு விரைந்த அரநாயக்க பொலிஸார், சம்பவம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த உயிரிழந்த குழந்தைகளின் தாயாரின் தந்தையான 61 வயதுடைய நிமல் விமலசூரிய,

''எனது மருமகன் மற்றும் மகளின் குழந்தைகள் இருவருமே இவ்வாறு உயிரிழந்திருக்கிறார்கள். மருமகனின் அம்மாவின் வீடு கிரிவுள்ள பிரதேசத்தில் அமைந்திருக்கிறது. இரு மாதங்களுக்கு முன்னர் குழந்தைகள் இருவரும் அரநாயக்க, கொடிகமுவ பிரதேசத்திலுள்ள எங்களின் வீட்டிலிருந்தே பாடசாலைக்குச் சென்றார்கள். மருமகன் குழந்தைகளை பாடசாலையிலிருந்து அழைத்துக்கொண்டு மகளையும் அழைத்துக் கொண்டு கிரிவுள்ள பிரதேசத்துக்குச் சென்றார். அதன்பின்னர் அங்கு இருவருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது. தன்னை கொலை செய்வதற்கான வாளை எடுத்துக்கொண்டு துரத்துவதாக மகள் தொலைபேசி அழைப்பினூடாக எங்களுக்கு அறிவித்திருந்தார். அதன் பின்னர் முச்சக்கரவண்டியில் சென்று மகளை கொடிகமுவ வீட்டுக்கு அழைத்து வந்திருந்தோம்.

நேற்று முன்தினம் (05) காலையில் அரநாயக்க பொலிஸில் இதுகுறித்து முறைப்பாடொன்றையும் பதிவுசெய்திருந்தோம். இந்த முறைப்பாடு தொடர்பான வழக்கு நேற்று (06) காலை 10 மணிக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது. 05ஆம் திகதி மாலை மருமகன் குழந்தைகள் இரு வரையும் அழைத்துக்கொண்டு சைக்கிளில் கொடிகமுவவிலுள்ள எங்களின் வீட்டுக்கு வந்தார்.

குழந்தைகள் உணவு அருந்தினார்கள். அதன்பின்னர் ஐஸ் கிறீம் வேண்டும் என்று கேட்டார்கள். குளிரூட்டியில் ஐஸ் கிறீம் இருக்கிறது. அதனை எடுத்து உட்கொள்ளுமாறு அறிவித்திருந்தேன். ஐஸ் கிறீம் அருந்திவிட்டு மகிழ்ச்சியாக இருந்தார்கள். பின்னர் மருமகன் அவரது வீட்டுக்கு புறப்பட ஆயத்தமானதால். குழந்தைகளை அழைத்துக்கொண்டு தற்போது புறப்பட வேண்டியதில்லை, நாளை மீண்டும் வரவேண்டி ஏற்படும் என்று நான் கூறியிருந்தேன். குழந்தைகள் பாடசாலை செல்ல வேண்டும் என்பதால் அழைத்துச் செல்வதாக கூறினார். இருந்தபோதும் அவரின் குழந்தைகள் என்பதால் என்னால் பலவந்தப்படுத்த முடியாது.

மாலை 5 மணியளவில் குழந்தைகளை அழைத்துச் சென்றார். அன்று இரவு 12.15 மணியளவில் மருமகனிடமிருந்து எனக்கு அழைப்பொன்று வந்தது. அந்த அழைப்பில் சைக்கிள் செயலிழந்துவிட்டதாகவும் வீட்டுக்கு நடந்துசெல்வதாகவும் கூறினார். அதற்கு, நடந்து செல்வதில் பிரச்சினை இல்லை, குழந்தைகளை பாதுகாப்பாக அழைத்துச் செல்லுமாறு நான் கூறினேன். காலையில் வருமாறும் அறிவித்தேன். அவ்வாறு சென்றிருந்த நிலையிலேயே காலையில் இவ்வாறு இடம்பெற்றிருப்பதாக கூறினார்.

இந்தக் கொலைச் சம்பவங்கள் மற்றும் தற்கொலைக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை என்பதுடன், அரநாயக்க பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகிறார்கள்.

## நீராடச் சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் நீரில் மூழ்கி உயிரிழப்பு

### சிலாபம் முகத்துவாரத்தில் சம்பவம்

சிலாபம் முகத்துவாரத்திற்கு அருகில் நீராடச்சென்ற மூவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 35 வயதான தந்தை, 06 வயதான மகள் மற்றும் 07 வயதான உறவுக்கார சிறுவனுமே நேற்று முன்தினம் (05)மாலை இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

அவர்கள் சிலாபம் முகத்துவாரத்திற்கு அருகே நீராடச் சென்றிருந்ததாகவும் இதன்போது நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.






**Secretary General and CEO**

**Institution: The Ceylon Chamber of Commerce**
***Email: ceo@chember.lk***

**Sales Executives**

**Company: OSI**
***Email: osi@osi.lk***

**Senior Planter**

**Company: Greenfield Bio Plantation PVT Ltd.**
**Email: murani@fairtradeorganicteas.com**
**Deputy Executive Director**
**Institution: FPA Sri Lanka**
***Email: careers@fpasrilanka.org***

**Field Officer**

**Location: Kaluthara**
***Email: careers@lankacanneries.com***

**Graphic Designer**

**Company: Seren Scents PVT Ltd**
**Age Limit: 20-30 Years**
***Email: saleslk@serenscents.co.uk***

**Content Writer**

**Company: The CEO Sri Lanka**
***Email: hello@ceo.lk***

**Japanese Translators**

**Company: Shimon Softhouse, PVT Ltd, Borella**
**Email: hr@shimonsofthouse.com**
**Manager – Technical Support**
**Company: Active Solutions, Wellawatte**
***Email: hr@activelk.com***

**எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அண்மை யில் கொழும்பு பேராயர் இல்லத்திற்குச் சென்று, இயற்கை எய்திய கொழும்பு மறை மாவட்டத்தின் ஓய்வு நிலைப் பேராயர் கலாநிதி ஒஸ்வெல்ட் கோமிஸ் ஆண்டகைக்கு இறுதி அஞ்சலி செலுத்தினார்.**

## மொனராகலை மாவட்டத்தில் 23 ஆயிரத்து 783 வாக்காளர்கள் தபால் மூலம் வாக்களிக்கத் தகுதி

### ஆயிரத்து 197 விண்ணப்பங்கள் நிராகரிப்பு

(கெலும் குணதிலக்க மொனராகல)

மொனராகலை மாவட்டத்தில் அமைந்துள்ள பத்து உள்ளூராட்சி மன்றங்களில் வசிக்கும் 23 ஆயிரத்து 783 வாக்காளர்கள் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளதாக மொனராகலை உதவித் தேர்தல் அதிகாரியும் உதவித் தேர்தல் ஆணையாளருமான சட்டத்தரணி நாகலிங்கம் ரீகன் தெரிவித்தார்.

தபால் மூலம் வாக்களிக்க 24 ஆயிரத்து 920 வாக்காளர்கள் விண்ணப்பித்திருந்த நிலையில், 1,197 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன.

பிரதேச மட்டத்தில் தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்களின் எண்ணிக்கை, ஏற்றுக் கொள்ளப்பட்ட மற்றும் நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. பிபில பிரதேசத்தில் 3,065 விண்ணப்பங்களில் 2,927 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், 137 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. மெதகம பிரதேசத்தில் 2,368 விண்ணப்பங்களில் 2,265 விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன், 113 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன.

மடுல்ல பிரதேசத்தில் 2,702 விண்ணப்பங்களில் 2,594 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், 108 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. சியம்பலாண்டுவ பிரதேசத்தில் 3,484 விண்ணப்பங்களில் 3,393 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன், 142 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. மொனராகலை பிரதேசத்தில் 3,313 விண்ணப்பங்களில் 3,098 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், 215 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. படல்கும்புர பிரதேசத்தில் 2,170 விண்ணப்பங்களில் 2,065 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், 105 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன.

புத்தல பிரதேசத்தில் 2,583 விண்ணப்பங்களில் 2,470 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், 113 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. கதிர்காமம் பிரதேசத்தில் 435 விண்ணப்பங்களில் 414 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், 21 விண்ணப்பங்கள் நிராகரிக் கப்பட்டன.

வெல்லவாய பிரதேசத்தில் 2,732 விண்ணப்பங்களில் 2,605 விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன், 127 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. தனமல்வில பிரதேசத்தில் 2,068 விண்ணப்பங்களில் 1,952 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், 116 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன.

தபால் மூல வாக்களிப்பு பெப்ரவரி 22, 23 மற்றும் 24ஆம் திகதிகளில் அந்தந்த நிறுவனங்களில் நடைபெறும் என உதவித் தேர்தல் ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

## தவறுகளை தட்டிக்கேட்டால் அடக்குமுறை பிரயோகம்

### மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட்




அரசாங்கம் இழைக்கும் தவறுகளை ஜனநாயக வழியில் தட்டிக்கேட்கும்போது, அவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுப்பவர்களுக்கு எதிராக அடக்குமுறை பிரயோகிக்கப்படுவதாகவும் இதனை நிறுத்தி மக்களின் கருத்துகளுக்கு செவிசாய்க்குமாறும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் கோரிக்கை விடுத்துள்ளார்.

வவுனியா, சாளம்பைக்குளத்தில் நேற்று முன்தினம் (05) இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் பின்னர், ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக் கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது,

“கடந்த ஆட்சியாளர்கள் நாட்டின் பொருளாதாரத்தின் நிலையை மாற்றியதனால் நாடு வங்குரோத்து நிலைக்குச் சென்று இன்று மக்கள் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். மக்கள் எதிர்நோக்குகின்ற கஷ்டங்களை வெளிப்படுத்துவதற்காக வீதியில் இறங்கி, ஜனநாயக ரீதியிலான போராட்டங்களை முன்னெடுக்கின்றபோது, அவர்களை அடக்கி, ஒடுக்கி மிக மோசமான முறையில் தாக்குதல்கள் நடத்தப்படுவதை இன்று காணக்கூடியதாக உள்ளது.

மக்களுடைய ஜனநாயகக் குரல் இவ்வாறு நசுக்கப்படுகின்றபோது, எதிர்காலத்தில் நாட்டில் பாரிய ஆபத்துகள் ஏற்படலாம் என்ற ஐயம் நிலவுகின்றது. எனவே, ஆட்சியாளர்கள் நாட்டு மக்களின் உண்மையான நிலையை உணர்ந்து, தற்பொழுது முன்னெடுத்துச் செல்கின்ற நடவடிக்கைகளை நிறுத்தி, மக்களுடைய நலனுக்கான திட்டங்களை வகுத்துச் செயல்பட வேண்டும் என்று வேண்டுகின்றோம்.

உயர்தரப் பரீட்சை நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற இந்தக் காலகட்டத்தில் கூட மின்சாரம் துண்டிக்கப்படுவதனால் மாணவர்கள் பெரும் கஷ்டங்களுக்கு ஆளாகியுள்ளனர்.

இதேபோன்று, இன்னும் எத்தனையோ விடயங்களில் அரசாங்கம் தவறிழைத்துக் கொண்டிருக்கின்றது. இவற்றையெல்லாம் ஜனநாயக ரீதியில் தட்டிக்கேட்கும்போது, அவர்களுக்கு எதிராக மிக மோசமான நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றனர். அவற்றை பார்க்கின்றபோது மிகவும் வேதனையாக இருக்கின்றது” - என்றார்.








**வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ். நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தின் தைப்பூச திருமஞ்ச உற்சவம் நேற்று முன்தினம் (05) பக்திபூர்வமாக இடம்பெற்றது.**

# காத்தான்குடியில் அரசு கையகப்படுத்திய பள்ளிவாசலுக்குள் புலனாய்வுப் பிரிவினர் காரியாலயம் அமைக்க முனைப்பு

## ஹர்த்தால் அனுஷ்டித்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்







(கனகராசா சரவணன்)

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் பின்னர் காத்தான்குடியில் சஹ்ரானுடன் தொடர்புடைய பள்ளிவாசல் என தெரிவித்து அரசாங்கத்தால் கையகப்படுத்திய ஜாமிஉல் ஆதர் ஜும்ஆப் பள்ளிவாசலை அரச புலனாய்வுப் பிரிவினர் தமது காரியாலயமாக இயங்குவதற்கு முயற்சித்ததையடுத்து அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து 'பள்ளிவாசலை பாதுகாப்போம்' எனும் தொனிப்பொருளில் நேற்று திங்கட்கிழமை (06) காத்தான்குடியில் ஹர்த்தால் அனுஷ்டித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

புதிய காத்தான்குடி கப்பல் ஆலீம் வீதியிலுள்ள ஜாமிஉல் ஆதர் ஜும்ஆப் பள்ளிவாசலை பாதுகாப்பு அமைச்சு பொறுப்பேற்றிருந்த நிலையில், பள்ளிவாசலை புலனாய்வுப் பிரிவினரால் திறக்க முயற்சிகள் இடம்பெற்ற நிலையில் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து காத்தான்குடி பொறுப்புவாய்ந்த நிறுவனங்களின் கூட்டமைப்பு 'பள்ளிவாசலை பாதுகாப்போம்' என அறவழிப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தது.

இதனையடுத்து வர்த்தக நிலையங்கள், அரச நிறுவனங்கள், பொதுச் சந்தைகள், வங்கிகள், பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டு மக்கள் வீட்டுக்குள் முடங்கியதுடன், வீதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டன. மேலும் வர்த்தக நிலையங்கள், பொதுச் சந்தைகள் என்பன மூடப்பட்டு இயல்புநிலை முற்றாக ஸ்தம்பிதமடைந்திருந்தது.

இந்நிலையில், அரசு கையகப்படுத்திய பள்ளிவாசலின் முன்னால் நூற்றுக்கு மேற்பட்ட பெண்கள், சிறுவர்கள் உட்பட பொதுமக்கள் ஒன்று திரண்டு, ''புனித இஸ்லாத்தை கொச்சைப்படுத்தி பள்ளிவாசலை நாசப்படுத்தாதே, பள்ளிவாசலை விடுவித்து பொதுமக்கள் தொழுவதற்கும் வணக்க வழிபாடுகளில் ஈடுபடுவதற்கும் இடமளி, பொலிஸார் மீது பொதுமக்கள் நம்பிக்கை வைத்துள்ளதை சீரழிக்க வேண்டாம், இறைவனின் இல்லத்தை இல்லாமல் ஆக்காதே, பொலிஸ் திணைக்களமே பள்ளியின் புனிதத்தில் கறைபடிந்த வரலாற்று தவறை செய்யாதே, இனவாதம் வளர்த்து தேசத்தை சீரழிக்காதே, முஸ்லிம்களை வாழவிடு, மக்கள் தமது பணத்தில் கட்டிய பள்ளிவாசலை திருப்பித் தா, வக்பு சபையில் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிவாசலை பொலிஸார் கையகப்படுத்துவதை நாங்கள் விரும்பவில்லை'' போன்ற சுலோகங்களை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி சுமார் ஒருமணித்தியாலம் வரை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, அங்கு விரைந்த காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி துமிந்த நயணசிறி, குறித்த பள்ளிவாசலுக்குள் பொலிஸார் வரமாட்டார்கள் என தெரிவித்ததையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கிழக்கு மாகாணத்தில் தமிழரின் இருப்பு கேள்விக்குறியாகியுள்ளது!

## இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தெரிவிப்பு

(கல்லடி செய்தியாளர்)



கிழக்கு மண்ணிலே 7 தசாப்தத்துக்கும் மேலாக தமிழ்த் தேசியம் என்ற போர்வையில் நகர்த்தப்பட்டுக்கொண்டிருக்கின்ற போலி தேசிய அரசியலால் கிழக்கு தமிழ் மக்களின் இருப்பு நாளுக்கு நாள் கேள்விக்குறியாகியுள்ளதாக வர்த்தக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு முனைக்காட்டில் வேட்பாளர் அறிமுகக் கூட்டம் நேற்று முன்தினம் (05) இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், கிழக்கு மாகாணத்தில் 58.9 சதவீதமாகக் காணப்பட்ட தமிழர்கள் தற்போது 38.6 வீதமாக காணப்படுகின்றனர். இன, மத, பொருளாதார ரீதியாகவும் இன்னோரன்ன சகல துறைகளிலும் எமது சமூகம் ஏனைய சமூகங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது வீழ்ச்சியடைந்து கொண்டுசெல்கின்றது.

தமிழர்களை தொடர்ந்தேர்ச்சியாக ஒரு கனவு உலகத்தில் வைத்துக்கொண்டு நகர்த்தப்படுகின்ற அரசியல், கிழக்கு தமிழர்களுக்கு ஒருபோதும் சரிவராது என்பதை உணர்ந்ததன் அடிப்படையிலேயே 2018இல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விட்டு வெளியேறினேன். 2020இல் நாங்கள் முற்போக்குத் தமிழர் கழகமாக ஆளுங்கட்சி சின்னத்தில் போட்டியிட்டபோது இவர் ஆளுங்கட்சிக்கு மாறிவிட்டார். வியாழேந்திரன் காணாமல்போய்விடுவார் என்று பலர் குறிப்பிட்டிருந்தனர். ஆனால், 73 வருட கூட்டமைப்பு வரலாற்றில் கூட்டமைப்பை விட்டு வெளியேறி முதன்முதலில் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் ஆளுங்கட்சி சின்னத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்றவன் நான் என்பதைப் பதிவு செய்கிறேன்.

நான் ஒட்டுமொத்த தமிழரசுக் கட்சியினரைக் குற்றம் சுமத்தமாட்டேன். ஆனால், கிழக்கு மாகாணத்திலிருக்கின்ற ஒருசில தமிழரசுக் கட்சி அரசியல்வாதிகளையே குறிப்பிடுகிறேன். வடக்கு, கிழக்கை இணைத்தால் இரத்த ஆறு ஓடும் என்றனர். இந்நிலையில், ஓட்டமாவடியில் காளி கோவிலை உடைத்து சந்தை கட்டினர். அம்பாறையில் பல தமிழ்க் கிராமங்கள் இல்லாமல் போய்க்கொண்டிருக்கின்றன. பல இந்துக் கோயில்கள் அழிக்கப்பட்டிருக்கின்றன - என்றார்.

# தண்டப்பணம் அறவீடு

(கோணாவத்தை செய்தியாளர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அம்பாறை வீதியில் அனுமதிப்பத்திர நிபந்தனையை மீறி மணல் ஏற்றி வந்த உழவு இயந்திர உரிமையாளருக்கு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தினால் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

அனுமதிப்பத்திர நிபந்தனையை மீறி மணல் ஏற்றி வந்த உழவு இயந்திரத்தை அக்கரைப்பற்று பொலிஸார் கைப்பற்றியிருந்தனர். கைப்பற்றப்பட்டிருந்த வாகனத்தை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நேற்று (06) ஆஜர்படுத்திய போது 20ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

ஏலவே முன் குற்றமும் காணப் பட்டமையினால் குறித்த தண்டப்பணம் விதிக்கப்பட்டது. வாகன உரிமையாளரினால் தண்டப்பணம் செலுத்தப்பட்டதோடு வாகனமும் விடுவிக்கப்பட்டது.

# யானைகளின் தொல்லையால் பயிர்கள் அழிந்து நாசம்

(கந்தளாய் செய்தியாளர்)

முள்ளிப்பொத்தானை பிரதேச சபைக்குட்பட்ட பாலம் போட்டாறு மற்றும் பத்தினிபுரம் பகுதியில் யானைகளின் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக பயிர்ச்செய்கையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இரவுவேளைகளில் யானைகள் புகுந்து பெறுமதியான பயிர்களை அழித்துவிட்டு செல்வதாகவும் தென்னந்தோட்டத்தினுள் புகுந்து தென்னை மற்றும் மா மரங்களை அழித்துள்ளதாகவும் அப்பகுதியில் வசிப்போர் கவலை தெரிவிக்கின்றனர்.

மேலும், அரசாங்கத்தினால் பயிர்கள் தரப்பட்டாலும் யானை வேலியை தர மறுக்கின்றார்கள். நாங்கள் அன்றாடம் கஷ்டப்பட்டு செய்கின்ற பயிர்களைக் கூட பாதுகாக்க முடியாத நிலையில் நாம் இருக்கின்றோம்.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் யானை வேலி அமைத்துத் தருமாறு பல தடவைகள் முறையிட்டும் அதிகாரிகள் கவனம் செலுத்தவில்லையெனவும் எனவே, இப்பகுதி மக்களின் நலன் கருதி விரைவில் யானை வேலிகளை அமைத்து தருமாறும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.





அம்பாறை மாவட்டம், திருக்கோவில் பகுதியில் அமைந்துள்ள உலகம் உய்ய அவதரித்த பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி ஆசிரமத்தில் தைப்பூச நிகழ்வு நேற்று (06) இடம்பெற்றது. இதன்போது உலக அமைதிக்கான பிரார்த்தனையும் விசேட பூசையும் இடம்பெற்றதுடன், புனித நதியில் சேகரிக்கப்பட்ட 1008 தீர்த்தம் பிரசாதமாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வி.சுகிர்தகுமார்)

# புற்றுநோயிலிருந்து தப்பிய விளையாட்டு வீரர்கள்



புற்றுநோயைப் பற்றிய உலகளாவிய கவனத்தையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்தவும், அதன் தடுப்பு, கண்டறிதல் மற்றும் சிகிச்சையை ஊக்குவிக்கவும் பெப்ரவரி 4ஆம் திகதியை உலக புற்றுநோய் தினமாக உலகம் கொண்டாடுகிறது.

புற்றுநோயிலிருந்து தப்பிய சில பிரபல விளையாட்டு வீரர்களின் பட்டியல்:

**யுவராஜ் சிங்**

இந்திய கிரிக்கெட் வீரர் யுவராஜ் சிங், புற்றுநோயிலிருந்து தப்பிய இந்திய விளையாட்டு வீரர்களில் மிக முக்கியமானவர். 2011 கிரிக்கெட் உலகக் கிண்ணப் போட்டிக்குப் பிறகு யுவராஜ் செமினோமா நுரையீரல் புற்றுநோயால் பாதிக்கப்பட்டார். அவர் 2017இல் இந்தியாவுக்காக விளையாடுவதற்கு முன்பு சிகிச்சைக்காக அமெரிக்கா சென்றார்.

யுவராஜ் பின்னர் YWC என்ற அறக்கட்டளையை நிறுவினார், இது புற்றுநோயின் களங்கத்தை ஒழிக்கவும், முன்கூட்டியே கண்டறிவதன் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் மற்றும் சிகிச்சையின் போதும் பின்தங்கிய புற்றுநோயாளிகளுக்கு உதவுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

**லான்ஸ் ஆம்ஸ்ட்ராங்**

முன்னாள் தொழில்முறை சைக்கிள் ஓட்டுநர் லான்ஸ் ஆம்ஸ்ட்ராங் 1996 இன் பிற்பகுதியில் டெஸ்டிகுலர் புற்றுநோயால் கண்டறியப்பட்டார்.

ஆம்ஸ்ட்ராங், சிகிச்சை பெற்று விளையாட்டுத் துறைக்குத் திரும்பினார், பிரான்ஸ் சுற்றுப்பயணத்தில் தொடர்ந்து ஏழு முறை வெற்றிபெற்று, புற்றுநோயால் பாதிக்கப்பட்ட பலருக்கு உத்வேகமாக மாறினார்.

இருப்பினும், அமெரிக்கர் தனது ஊக்கமருந்து ஒப்புதல் வாக்குமூலத்தைத் தொடர்ந்து கருணையிலிருந்து வீழ்ந்திருக்கலாம், ஆனால், அவர் பல புற்றுநோயாளிகளுக்கு நம்பிக்கைக்குரிய நபராக இருக்கிறார். லான்ஸ் ஆம்ஸ்ட்ராங், லைவ்ஸ்ட்ராங் குளோபல் கான்சர் உச்சி மாநாட்டை, அயர்லாந்தில்ஆரம்பித்தார்.

**லூயிஸ் வான் கால்**

நெதர்லாந்தின் முன்னாள் கால்பந்து வீரரும் பயிற்சியாளருமான லூயிஸ் வான் கால் 2022ஆம் ஆண்டில் தனக்கு புற்றுநோய் இருப்பதை வெளிப்படுத்தியபோது விளையாட்டு உலகை அதிர்ச்சிக்குள்ளாக்கினார்.

இருப்பினும், புரோஸ்டேட் புற்றுநோய்க்கான வெற்றிகரமான சிகிச்சைக்குப் பிறகு, கட்டார் உலகக் கிண்ணத்தில் நெதர்லாந்தை இரண்டாவது முறையாக டச்சுக்காரர்கள் பொறுப்பேற்றனர்.










**மார்டினா நவ்ரதிலோவா**

டென்னிஸ் ஜாம்பவான் மார்டினா நவ்ரதிலோவா, தனக்கு தொண்டை மற்றும் மார்பகப் புற்றுநோய் இருப்பது கண்டறியப்பட்டுள்ளதாக சமீபத்தில் தெரிவித்தார்.

66 வயதான அவர் எல்லா காலத்திலும் சிறந்த பெண் டென்னிஸ் வீரராக பரவலாகக் கருதப்படுகிறார். ஓபன் சகாப்தத்தில் 18 பெரிய ஒற்றையர் பட்டங்கள், 31 பெரிய பெண்கள் இரட்டையர் பட்டங்கள் மற்றும் 10 பெரிய கலப்பு இரட்டையர் பட்டங்களுடன் அவர் 59 முக்கிய பட்டங்களை வென்றுள்ளார்.

**செபஸ்டின் ஹாலர்**

உலக புற்றுநோய் தினமான இன்று செபஸ்டின் ஹாலரின் வாழ்க்கை முழு வட்டமாக வந்தது, அவர் புற்றுநோயை வெற்றிகரமாக முறியடித்த பிறகு போருசியா டார்ட்மண்டிற்காக தனது முதல் பன்டெஸ்லிகா கோலை அடித்தார்.

ஹாலர், முன்னாள் அஜாக்ஸ் முன்னோடி, 2022 இல் போருசியாவின் பருவத்திற்கு முந்தைய பயிற்சியின்போது டெஸ்டிகுலர் புற்றுநோயால் கண்டறியப்பட்டார்.

புற்றுநோயுடன் ஆறு மாதப் போரைத் தொடர்ந்து, பிரெஞ்சு-ஐவோரியன் தனது புதிய ஜெர்மன் கிளப்பிற்கான தனது நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட போட்டியில் விளையாடினார்.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# தேசிய வலைப்பந்து சம்பியன்ஷிப் போட்டிக்கு டயலொக் அனுசரணை




இலங்கையில் நடைபெறவுள்ள சிரேஷ்ட வீராங்கனைகளுக்காக தேசிய வலைப்பந்து சம்பியன்ஷிப் தொடரின் பிரதான அனுசரணையாளர்களாக முன்னணி தொலைத் தொடர்பு நிறுவனமான டயலொக் ஆசியாட்டா (Dialog Axiata PLC) அனுசரணை வழங்கவுள்ளது.

சிரேஷ்ட வீராங்கனைகள் பங்குபெறும் தேசிய வலைப்பந்து சம்பியன்ஷிப் தொடர் எதிர்வரும் 11ஆம், 12ஆம் திகதிகளில் கொழும்பு டொரிங்டன் அரங்கில் நடைபெறவுள்ளது. இறுதிப் போட்டி 13ஆம் திகதி மாலை கொழும்பு சுகததாஸ உள்ளரங்கில் நடைபெறும். 35 வலைப்பந்து அணிகள் தேசிய சம்பியன்ஷிப் போட்டியில் பங்குபற்றுகின்றன.

இந்த ஆண்டின் நடுப்பகுதியில் வலைப்பந்து உலகக் கிண்ணப் போட்டி தென்னாபிரிக்காவின் கேப் டவுனில் நடைபெறவுள்ளது. ஆசிய வலைப்பந்து நடப்புச் சம்பியனாக இலங்கை தேசிய வலைப்பந்து அணியே உள்ளது.

# தீபா கர்மாகருக்கு தடை



இந்திய ஜிம்னாஸ்ரிக் வீராங்கனை தீபா கர்மாகர், தடைசெய்யப்பட்ட மருந்தை பயன்படுத்தியதற்காக 21 மாதங்கள் போட்டியில் பங்கேற்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

திரிபுரா மாநிலத்தைச் சேர்ந்த தீபா கர்மாகர், 2016ஆம் ஆண்டு நடந்த ரியோ ஒலிம்பிக் போட்டியில் 4ஆம் இடத்தைப் பிடித்தார். இந்தியா சார்பாக பங்கேற்ற முதல் பெண் ஜிம்னாஸ்ரிக் வீராங்கனை என்ற பெருமையையும் பெற்றார். இந்நிலையில், அவர் ஊக்கமருந்து விதிகளை மீறியதாக 2 ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியானது. ஆனால், இதுதொடர்பாக எந்த அதிகாரப்பூர்வ அறிவிப்பும் வெளியாகவில்லை.

இந்நிலையில், தீபா கர்மாகருக்கு ஊக்கமருந்து விவகாரத்தில் 21 மாதங்கள் தடை விதிக்கப்பட்டதை சர்வதேச ஊக்கமருந்து தடுப்பு ஆணையம் உறுதி செய்துள்ளது. எதிர்வரும் ஜூலை 10ஆம் வரை இந்த தடை உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தீபா கர்மாகருக்கு 2016ஆம் ஆண்டு ராஜிவ் காந்தி கேல் ரத்னா விருதை வழங்கி மத்திய அரசு கௌரவித்தது. 2017ஆம் ஆண்டு பத்மஸ்ரீ விருதும் இவருக்கு வழங்கப்பட்டது.

# ஒற்றுமையை குலைத்தவர்கள் நாங்களல்லர் அதற்கான தீர்ப்பை மக்களே வழங்குவர்!

## சுமந்திரன் எம்.பி. அம்பாறையில் தெரிவிப்பு



(வி.சுகிர்தகுமார்)

ஒற்றுமையை குலைத்தவர்கள் நாங்கள் அல்ல. அதற்கான தீர்ப்பை மக்கள் வழங்குவார்கள் என்று தமிழரசுக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான சுமந்திரன் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட ஆலையடிவேம்பு பிரதேச சபைக்கான உள்ளூராட்சித் தேர்தலில் தமிழரசுக் கட்சி சார்பாக போட்டியிடும் வேட்பாளர்கள் அறிமுக நிகழ்வு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தலைமையில் நேற்று முன்தினம் (05) மாலை ஆலையடிவேம்பு பிரதேச சபை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது ஆலையடிவேம்பு பிரதேச சபைக்கான 10 வட்டாரங்களில் போட்டியிடும் வேட்பாளர்களும் போனஸ் ஆசனங்களுக்காக தெரிவுசெய்யப்பட்ட 09 வேட்பாளர்களும் அறிமுகம் செய்துவைக்கப்பட்டனர்.

இதன்போது உரையாற்றிய சுமந்திரன் எம்.பி.,

இன்று தமிழரசுக் கட்சி ஆதரவாளர்களிடையே ஒரு குழப்பநிலை உருவாகியுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இருந்த நீங்கள் இன்று ஒற்றுமையை சிதறடித்துவிட்டீர்கள் என எங்கள் மீது குற்றம் சுமத்துகின்றனர்.

இயன்றவரை விட்டுக் கொடுத்தோம். அவர்கள் சொல்வதுபோல் செய்யவும் சம்மதித்தோம். ஆனாலும் அவர்கள் தனியாக பிரிந்து சென்றனர். அந்த ஒற்றுமையை குலைத்தவர்கள் நாங்கள் அல்ல. அதற்கான தீர்ப்பை மக்கள் வழங்குவர் - என்றார்.

சாணக்கியன் எம்.பி. உரையாற்றுகையில்,

கட்சிக்கான ஒரே நிறத் துண்டை தொடர்ந்தும் கழுத்தினில் அணிந்துகொள்ளக்கூடிய கட்சி தமிழரசுக் கட்சி மாத்திரமே. ஏனைய கட்சிகள் தமது கட்சி துண்டை தூக்குப் போடுவதற்கு மாத்திரமே பயன்படுத்தும் நிலையில் உள்ளனர். தமிழ் மக்களின் அரசுக்கான கட்சியும் தமிழரசுக் கட்சியே. தொடர்ச்சியாக தமிழ் மக்களின் உரிமைக்காக குரல் கொடுக்கும் கட்சியும் அதுவே.

கடந்த தேர்தலில் கப்பல் ஒன்றை வாடகைக்கு ஒருவர் எடுத்துவந்து மக்களை ஏமாற்றினார். அவர் இன்று மட்டக்களப்பிற்கு அதனை வாடகைக்காக பெற்று வந்துள்ளார். அம்பாறையில் நடந்தது ஒருபோதும் மட்டக்களப்பில் நடைபெறாது. இதேநேரம் இம்முறை கப்பலுக்குப் பதிலாக படகை ஒருவர் எடுத்து வந்துள்ளார் - என்றார்.

தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, முன்னாள் எம்.பி. கலையரசன், வேட்பாளர்கள், கட்சித் தொண்டர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# மொட்டுக்கோ யானைக்கோ அடகுவைக்கப்பட்ட கட்சியல்ல தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள்

## இணக்கப்பாட்டு அரசியலுடன் பயணிக்க கிழக்கை நேசிக்கும் தமிழ்க் கட்சிகளை இணையுமாறும் சந்திரகாந்தன் எம்.பி. அழைப்பு

(கனகராசா சரவணன்)

கிழக்கு மாகாணம் பூராகவும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி தனித் தமிழ்க் கட்சியாக படகு சின்னத்தில் போட்டியிடுகின்றது. இது மொட்டுக்கோ யானைக்கோ அடகுவைக்கப்பட்ட கட்சியல்ல. எனவே, கிழக்கு மாகாணத்தை நேசிக்கின்ற அனைத்து தமிழ்க் கட்சிகளையும் இணக்கப்பாட்டு அரசியலுடன் பயணிக்க அணித்திரளுமாறு அழைக்கின்றோம் என இராஜாங்க அமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் அழைப்பு விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை அறிமுகம் செய்யும் நிகழ்வு கல்லடி மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (05) இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி எப்போதும் இணக்கப்பாட்டு அரசியலை செய்து மக்களை கட்டியெழுப்ப எண்ணுகின்றது. அதற்கு காரணங்கள் பல கிழக்கு மாகாணத்தில் இருக்கின்றன. இதை உணர்ந்த நாங்கள் அரசியலையும் அரச நிர்வாகத்தையும் அரச பலத்தையும் சமமாக கையாண்டு கொண்டுதான் உரிமைகளை பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற தூரநோக்கில் செயலாற்றிக் கொண்டிருக்கின்றோம். இந்த நோக்கத்தை அடைவதற்கு இணக்கப்பாட்டு அரசியல் என்பதை முக்கியமாக பார்க்கின்றோம். அதனால் முரண்பாடுகளோடு மாநகர சபையையோ உள்ளூராட்சி சபையையோ கட்டியெழுப்ப முடியாது. இணக்கப்பாட்டுடன் தான் கட்டியெழுப்ப முடியும்.





இங்கு சுமந்திரன் எம்.பி. ஒற்றுமை பற்றி அறைகூவல் விடுக்கின்றார். அவருடைய வீட்டுக்குள்ளேயே ஒற்றுமையை ஏற்படுத்த முடியாத ஒருவர். அவர்களே கட்சியின் கூட்டமைப்பை கலைத்துவிட்டு சாணக்கியன் எம்.பி. கூட்டமைப்பின் பேச்சாளர் என வேடம் தரித்துக்கொண்டு மற்றவர்களுக்கு அழைப்பு விடுகின்றனர்.

கிழக்கு மாகாண சபை 20 வருடமாக இயங்காதிருந்தபோது அதனை தூசிதட்டி எடுத்துள்ளோம். கிழக்கு மாகாணத்தை நேசிக்கின்ற பற்றுள்ளவர்களுக்கு, கிழக்கு மாகாணம் பலவீனப்பட்டுள்ளது. கிழக்கு கிழக்காக இருக்கவேண்டும் என ஏற்றுக்கொள்ளும் அனைத்து தமிழ்க் கட்சிகளும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியுடன் அணித்திரளுங்கள்.

2008ஆம் ஆண்டு நான் போட்டியிடும்போது என்னை தோற்கடிக்க வேண்டும் என்று முஸ்லிம் காங்கிரஸுக்கு துண்டுப்பிரசுரம் விநியோகித்த மிகப் பெரிய துரோகி மாவை சேனாதிராஜா.

2012ஆம் ஆண்டு என்னை தோற்கடிப்பதற்காக கொள்கைகளை விட்டுவிட்டோம், மாகாணத்தில் போட்டியிடுவோம் என இந்தத் துரோகக் கூட்டம் கிழக்கில் என்ன செய்தது என்று மக்களுக்குத் தெரியும். கிழக்கு மாகாண மக்களை அழிப்பதும் கிழக்கில் உருவாகும் தலைவர்களை இல்லாமல் செய்வதும் அவர்களின் மண்டைகளை கழுவி இல்லாமல் செய்வதும் கடந்த வரலாற்றில் இராஜதுரை போன்றவர்களுக்கு செய்ததிலிருந்து கற்றிருக்கின்றோம்.

போலி தேசியம் பேசி கிழக்கை அழிக்கும் போலி தேசியவாதிகளை அடித்து நிறுத்தி ஒட்டு மொத்த கிழக்கு மாகாணத்திலும் தமிழர்களின் ஆட்சியை மீண்டும் நிறுவ படகு சின்னத்துக்கு வாக்களியுங்கள். கிழக்கு மாகாணம் பூராகவும் நாங்கள் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியாக தனித் தமிழ்க் கட்சியாக படகு சின்னத்தில் போட்டியிடுகின்றோம் என்பதை எதிர்க்கட்சியினருக்கு சொல்லிவைக்கின்றேன் என்றார்.

# புதிய நேர இடைவெளியில் பஸ் சேவை

(கந்தளாய் செய்தியாளர்)




திருகோணமலை நகருக்கு புல்மோட்டையிலிருந்து மாலைவேளைகளில் பயணிக்கவும் தேவைகளின் நிமித்தம் சென்ற பயணிகளும் அசௌகரியங்களை எதிர் நோக்காது புல்மோட்டை திரும்பி வர வசதியாக புதியதோர் நேர இடைவெளியில் பஸ் சேவை ஒன்றை இயக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

கிழக்கு மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் நேற்று திங்கட்கிழமை (06) புல்மோட்டைக்கு விஜயம் செய்தபோது குச்சவெளி பிரதேச சபையின் தவிசாளர் ஏ.முபாறக், அவரைச் சந்தித்து விடுத்த வேண்டுகோளுக்கமைய, மேற்படி பஸ் சேவையானது எதிர்வரும் வாரத்திலிருந்து ஆரம்பிப்பதாக தவிசாளரிடம் பணிப்பாளர் நாயகத்தால் தெரிவிக்கப்பட்டது.

குறித்த பஸ் சேவை புல்மோட்டையிலிருந்து மாலை 5.30 மணிக்கு புறப்படவுள்ளதோடு, திருகோணமலையிலிருந்து புல்மோட்டைக்கு இரவு 8.00 மணிக்கு இடம்பெறும் எனவும் குச்சவெளி பிரதேச சபையின் தவிசாளர் தெரிவித்தார்.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

# புலமைப்பரிசில் சித்தி



கடந்தாண்டு நடைபெற்ற தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் கல்முனை கல்வி வலய மாளிகைக்காடு கமு/கமு/ சபீனா முஸ்லிம் வித்தியாலயத்திலிருந்து தோற்றிய மாணவன் சமி யூசுப் 152 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.

சித்தியடைந்த மாணவனுக்கும் கற்பித்த ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை அதிபர் ஆகியோருக்கும் பாடசாலை சமூகம் பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவிக்கின்றது.

(மாளிகைக்காடு செய்தியாளர்)





சுதந்திர தினத்தில் தூய்மையானதும் பசுமையானதுமான இலங்கை எனும் தொனிப்பொருளில் களுவாஞ்சிக்குடி எருவில் கிராமத்தில் இடம்பெற்ற மரநடுகை நிகழ்வில் கலந்துகொண்டவர்களை காணலாம்.

(பாண்டிருப்பு செய்தியாளர்)

# மாற்றுத்திறனாளி விவசாயிகளுக்கு உலருணவுப் பொருட்கள் வழங்கல்






(கல்குடா செய்தியாளர்)

மட்டக்களப்பு மாவட்ட கோறளைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் வீட்டுத்தோட்டம் செய்யும் விசேட தேவையுடையோருக்கு உலருணவுப் பொருட்கள் வழங்கும் நிகழ்வு நேற்று(06) திங்கட்கிழமை சமூக பராமரிப்பு காரியாலயத்தில் இடம்பெற்றது.

கோறளைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் விசேட தேவையுடையோரை ஊக்குவிக்கும் முகமாகவும் நாட்டின் பொருளாதார நெருக்கடியிலிருந்து மக்களை பாதுகாக்கும் நோக்கிலும் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் வழிகாட்டலில் பல்வேறு வேலைத்திட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. இதனடிப்படையில் கோறளைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் வாழ்வின் உதயம் மாற்றுத் திறனாளிகள் அமைப்பின் அங்கத்தவர்கள் 128 பேர் வை.எம்.சி.ஏ. நிறுவனத்தின் அனுசரணையில் வீட்டுத் தோட்டச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுக்கு தலா பத்தாயிரம் ரூபா பெறுமதியிலான உலருணவுப் பொருட்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

சமூக சேவை உத்தியோகத்தர் எஸ்.ஜெயசேகர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கோறளைப்பற்று உதவி பிரதேச செயலாளர் திருமதி அமலினி கார்த்தீபன், சமூக சேவைத் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பிரேமானந்த சுதர்சினி, வை.எம்.சி.ஏ. நிறுவனத்தின் மட்டக்களப்பு மாவட்ட பதில் பொதுச் செயலாளர் எஸ்.பெற்றிக் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

## போடியார் புலம்பல்!



**இலங்கையின் உயிர்த்தோழன் அன்றும் இன்றும் இந்தியாதான் எண்டு அந்த நரில் சொல்லிப்போட்டாரு எலுவா? அப்ப இலங்கையின் வைப்பாட்டி சீனாவோ..? உயிர்த்தோழன் இந்தியா கொண்டுவந்த இலங்கை - இந்திய ஒப்பந்தம், 13ஆவது அரசியல் திருத்தம் எல்லாம் கிடப்புல போட்டதற்கும் அந்த உயிர்த்தோழன்தான் சிங்களத் தலைவர்கள கைக்குள போட்டது எண்டதும் மெய் எலுவா..?**

# போதையற்ற பிரதேசத்தை உருவாக்குவோம்

## வேட்பாளர் முனாஸ் நம்பிக்கை



(கோணாவத்தை செய்தியாளர்)

இன்று நாட்டில் மிக மோசமாக அதிகரித்திருக்கும் போதைப்பொருளை முற்றாக ஒழிக்கவேண்டுமென்ற கோஷத்துடன் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தேர்தல் பிரகடனத்தில் முதற்கடமையாக 'போதையற்ற பிரதேசத்தை உருவாக்குவோம்' என்ற கோஷத்தை முன்வைத்திருக்கிறது - என முன்னாள் பிரதேச சபை உறுப்பினரும், அறபா வட்டார வேட்பாளருமான எஸ்.எல்.முனாஸ் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனையில் அவரது கட்சிக் காரியாலயத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்று கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் இதனை மக்கள் முழுமையாக ஏற்றுக்கொள் வார்கள். நாங்களும் அதனை முழுமையாக செயல்படுத்த எண்ணியே அதற்காக மக்கள் ஆணையை வேண்டி நிற்கின்றோம் - என்றார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர், நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸுக்கு மக்கள் மத்தியில் பலத்த வரவேற்பு காணப்படுவதுடன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சி செய்த சபைகளைக்கூட அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கைப்பற்றும் நிலைமை இன்று உருவாகியிருக்கின்றது. அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் அமோக வெற்றி பெற்று அட்டாளைச்சேனை பிரதேச சபையினை இம்முறை கைப்பற்றும்.

அதேவேளை, அம்பாறை மாவட்டத்தில் பல இடங்களில் வேட்பாளர்களை களமிறக்கியுள்ள நிலையில், எமது கட்சியை அங்கீகரிக்கும் மக்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் காணப்படுவதுடன் தொடராக சில கட்சிகளினால் ஏமாற்றப்படும் மக்கள் இன்று மாற்றமொன்றை எதிர்பார்த்து மக்கள் காங்கிரஸ் பக்கம் அணிதிரண்டு வருகின்றனர் - என்றார்.

# ஹெரோயினுடன் ஒருவர் கைது

(கோணாவத்தை செய்தியாளர்)

அக்கரைப்பற்று பிரதேசத்தில் ஹெரோயினுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அக்கரைப்பற்று பொலிஸாருக்குக் கிடைக்கப்பட்ட இரகசியத் தகவலின்படி, குறித்த பிரதேசத்திற்கு சென்ற பொலிஸார் நபர் ஒருவரை கைது செய்துள்ளதுடன் அவரிடமிருந்து 20 மில்லி கிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் ஞாயிற்றுக்கிழமை (05) ஆஜர்படுத்தியபோது எதிர்வரும் 17ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.









குடும்பத்துடன் மாட்டு வண்டியில் வயலுக்கு பயணித்து, பூஜைகள் நடத்திச்சென்று நெல் அறுவடை செய்து புதிர் எடுக்கும் பாரம்பரிய புதிர் அறுவடை செய்யும் நிகழ்வு நேற்று (06) காலை திருகோணமலை மாவட்ட மூதூர், மணற்சேனை பகுதியில் இடம்பெற்றது. மூதூர், மணற்சேனை சித்திவிநாயகர் ஆலய நிர்வாகம் இதனை ஏற்பாடு செய்திருந்தது. இதில் விவசாய அமைப்புகள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

(மூதூர் செய்தியாளர்)





# துருக்கி - சிரியாவை உலுக்கிய 7.8 ரிச்டர் சக்திவாய்ந்த நிலநடுக்கம்

## 2,500 பேர் உயிரிழப்பு 6,000பேர் படுகாயம்

## துருக்கியில் அவசரநிலை பிரகடனம்; இத்தாலியில் சுனாமி எச்சரிக்கை

## அதிர்ந்தன லெபனான் - ஜோர்தான் - பிரித்தானியா - ஈராக் - சைப்பிரஸ்

















துருக்கி மற்றும் சிரியா ஆகிய நாடுகளில் நேற்று (06) அதிகாலை ஏற்பட்ட 7.8 ரிச்டர் சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் 2,500இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதுடன், 6000இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

### மீண்டும் 7.5 ரிச்டரில் அதிர்ந்த துருக்கி

இந்நிலையில் துருக்கியில் நேற்று பிற்பகல் 1.24 மணியளவில் (உள்ளூர்நேரப்படி) மீண்டும் 7.5 ரிச்டரில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் பதிவாயுள்ளது. இதனால் மக்கள் பீதியில் உரைந்துள்ளனர்.

துருக்கியில் நிலநடுக்கம் காரணமாக எரிவாயு பைப்லைன் வெடித்துச் சிதறியுள்ளது. இதனால் அங்கு பதற்றம் ஏற்பட்டது. இதனையடுத்து துருக்கியில் அவசரநிலையை பிரகடனம் செய்த அரசு, மீட்புப்பணிகளை தீவிரப்படுத்தியுள்ளது.

7.8 ரிச்டர் சக்திவாய்ந்த நிலநடுக்கத்தைத் தொடர்ந்து இத்தாலி சுனாமி பேரலை எச்சரிக்கையை விடுத்துள்ளது.

இந்நிலநடுக்கம் சுமார் ஒரு நிமிடம் நீடித்த நிலையில் துருக்கியின் அருகேயுள்ள இஸ்ரேல், லெபனான், ஜோர்தான், பிரித்தானியா, ஈராக், சைப்பிரஸ் மற்றும் எகிப்து உள்ளிட்ட நாடுகளிலும் உணரப்பட்டுள்ளது. நிலநடுக்கத்தால் கட்டடங்கள் குலுங்கியதால் பீதியடைந்த மக்கள் வீதிகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

துருக்கி மற்றும் சிரியா ஆகிய இரு நாடுகளிலும் ஏற்பட்ட 7.8 ரிச்டர் நிலநடுக்கத்தையடுத்து இரு நாடுகளிலும் கட்டடங்கள் பல இடிந்து தரைமட்டாகியுள்ளன. நிலநடுக்கம் ஏற்பட்டது அதிகாலை வேளை என்பதால் நித்திரையிலிருந்த அதிகமானோர் கட்டட இடிபாடுகளில் சிக்கிக்கொண்டுள்ளனர். மீட்புப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்றுவரும் நிலையில், கட்டட இடிபாடுகளிலிருந்து தோண்ட தோண்ட சடலங்கள் கிடைப்பதால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை பல மடங்கு அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது.

இந்நிலையில், நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள துருக்கி - சிரியாவுக்கு உதவத் தயாராக இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளதுடன், துருக்கிக்கு உதவிக்கரம் நீட்டுவதாக உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கி தெரிவித்துள்ளார். அத்தோடு, ''துருக்கி, சிரியாவில் நிலநடுக்கத்தால் உயிரிழப்பு ஏற்பட்டு, உடைமைகள் சேதமடைந்துள்ளமை வேதனை தருகிறது'' என இந்தியப் பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, துருக்கி மற்றும் சிரியாவுக்கு அவசர உதவிகளை வழங்க தமது நாடு தயாராக இருப்பதாக பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரோன் தெரிவித்துள்ளார்.

### அடுத்தடுத்து 40 அதிர்வுகள்

கிழக்கு துருக்கியிலுள்ள கஸியண்டெப் (Gaziantep) நகரில் பூமிக்கு அடியில் 11 மைல் தொலைவில் நிலநடுக்கம் மையம் கொண்டிருந்ததாகவும், சரியாக அதிகாலை 4.17 மணிக்கு (உள்ளூர் நேரப்படி) நிலநடுக்கம் ஏற்பட்டதாகவும் அமெரிக்க புவியியல் ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

நிலநடுக்கம் ஏற்பட்டதிலிருந்து சரியாக 10 நிமிடங்கள் இடைவெளியில் மற்றுமொரு சக்திவாய்ந்த நிலநடுக்கமும் ஏற்பட்டுள்ளது. அந்நிலநடுக்கம் 6.7 ரிச்டர் அளவில் பதிவாயுள்ளது. 7.8 ரிச்டர் நிலநடுக்கத்தைத் தொடர்ந்து 40 நில அதிர்வுகள் உணரப்பட்டுள்ளதாக சர்வதேச தகவல்கள் தெரிவிக்கின்றன.

கஸியண்டெப் நகரம் சிரிய எல்லையை ஒட்டியுள்ள நகரமாகும். தொழில் நகரமாக அறியப்படும் கஸியண்டெப் நகரில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் தாக்கம் அருகிலிருக்கும் லெபனான், சைப்ரஸ், சிரியா நாடுகளிலும் உணரப்பட்டுள்ளது. இதில் சிரியாவில் மிக மோசமான பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

### துருக்கியில் அவசரநிலை பிரகடனம்

துருக்கியில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தைத் தொடர்ந்து அங்கு அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

கஸியண்டெப் மாகாணத்தின் நுர்தாகி அருகே 7.8 ரிச்டர் அளவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் வீடுகள், கட்டடங்கள் இடிந்து தரைமட்டமாகியுள்ளன. கட்டடங்கள் குலுங்கியதால் மக்கள் வீதிகளில் தஞ்சமடைந்துள்ளனர். தென்கிழக்கு துருக்கியிலுள்ள காஸியண்டெப் பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டு ஏராளமான கட்டடங்கள் சேதமடைந்துள்ளன.

துருக்கியின் நர்டஹி நகரிலிருந்து 23 கிலோமீற்றர் கிழக்கே 17 கிலோமீற்றர் ஆழத்தை மையமாகக்கொண்டு இன்று பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. அந்நாட்டு நேரப்படி நேற்று அதிகாலை 4.17 மணியளவில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவில் 7.8ஆக பதிவானது. நிலநடுக்கம் ஏற்பட்ட பகுதி துருக்கி - சிரியா எல்லை அருகே அமைந்துள்ளது.

துருக்கியில் இதுவரை ஏற்பட்ட நிலநடுக்கங்கள் மிகப்பெரிய நிலநடுக்கம் இது என தெரிவிக்கப்படுகின்றது. காஸியண்டெப் மாகாணத்தில் சுமார் 2 மில்லியன் மக்கள் வசிக்கின்றனர். அவர்களில் ஏராளமானோர் உள்நாட்டு யுத்தத்தால் பாதிக்கப்பட்டு நாட்டை விட்டு வெளியேறிய சிரிய அகதிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

### துருக்கியின் 10 நகரங்கள் கடும் பாதிப்பு

தெற்கு துருக்கியில் அங்காரா, காஸியாண்டெப், கரோமான்மராஸ், ஹாதாய், உஸ்மானியா, அடியமான், மலாட்டியா, சன்லிபிரா, அதானா உள்ளிட்ட 10 நகரங்கள் கடும் பாதிப்பைச் சந்தித்துள்ளன.

நிலநடுக்கதால் பெரிய கட்டடங்கள் மற்றும் வீடுகள் குலுங்கின. இதையடுத்து மக்கள் பாதுகாப்புக் கருதி, வீதியில் தஞ்சமடைந்தனர். இதனால் அப்பகுதி மக்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

### வெடித்துச் சிதறிய எரிவாயு பைப்லைன்

துருக்கியில் நிலநடுக்கம் காரணமாக எரிவாயு பைப்லைன் வெடித்துச் சிதறியுள்ளது. இதனால் அங்கு பதற்றம் ஏற்பட்டது. இதனையடுத்து துருக்கியில் அவசரநிலையை பிரகடனம் செய்த அரசு, மீட்புப்பணிகளை தீவிரப்படுத்தியுள்ளது.

### கட்டட இடிபாடுகளுக்குள் கேட்கும் அழுகுரல்கள்

துக்கியில் மீட்புப் பணிகளுக்காக 1000இற்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் களமிறக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில், மீட்புப் பணிகள் துரித கதியில் நடைபெற்றுவருவதுடன், கட்டட இடிபாடுகளிலிருந்து அழுகுரல்கள் கேட்பதாக மீட்புப் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர். அங்கு மீட்புப் பணிகள் தொடர்கின்றன.

### துருக்கியில் 1,300 பேர் உயிரிழப்பு 5,000 பேர் படுகாயம்

இந்நிலநடுக்கத்தால் துருக்கியில் 2,818இற்கும் மேற்பட்ட கட்டடங்கள் இடிந்து தரைமட்டமாகியுள்ளன. இடிபாடுகளில் சிக்கி இதுவரை 1,300இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதுடன், 5000இற்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர் என துருக்கி துணை ஜனாதிபதி Fuat Oktay தெரிவித்துள்ளார். அங்கு மீட்புப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்ற நிலையில், கட்டட இடிபாடுகளிலிருந்து சடலங்கள் மீட்கப்பட்டு வருவதாகவும், காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டோரில் பலரின் நிலை கவலைக்கிடமான நிலையிலுள்ளதால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் எனவும் அஞ்சப்படுகிறது.

துருக்கி ஜனாதிபதி ரெசெப் தயிப் எர்டோகன் (Recep Tayyip Erdogan) தனது ட்விட்டர் பக்கத்தில்,

''நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மீட்பு, நிவாரணக் குழுக்கள் உடனடியாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இந்தப் பேரிடரிலிருந்து குறைந்த சேதாரத்துடன் நிச்சயமாக மீண்டு வருவோம் என நம்புகிறேன்'' என்று பதிவிட்டுள்ளார்.

### மோசமான பாதிப்பை சந்தித்த சிரியா

துருக்கியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் தாக்கத்தால் சிரியா மிக மோசமான பாதிப்பைச் சந்தித்துள்ளது. நிலநடுக்கத்தின் விளைவாக கட்டடங்கள் பல இடிந்து தரைமட்டமாகியுள்ளன. அங்கு 600இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதுடன், 1,042 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன. மீட்புப் பணிகளுக்காக 'வைட் ஹெல்மட்' என்ற பேரிடர் கால மீட்புப் பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

நிலநடுக்கத்தால் சிரியாவின் தலைநகர் டமாஸ்கஸ், இட்லிப் உள்ளிட்ட பல நகரங்கள் கடும் பாதிப்பைச் சந்தித்துள்ளன.

11 ஆண்டுகளுக்கும் மேலான உள்நாட்டுப் போரால் பேரழிவிற்குள்ளான சிரியாவில் ஹமா, அலெப்போ மற்றும் லதாகியா மாகாணங்களில் இதுவரை 237இற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளதுடன், சுமார் 600 பேர் காயமடைந்ததாகவும் அந்நாட்டு சுகாதார அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சிரிய ஜனாதிபதி பஷார் அல்-அசாத், சேதத்தை மறுபரிசீலனை செய்யவும், அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கவும் அவசர அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டியுள்ளார்.

சிரியாவில் மீட்புப் பணிகள் இடம்பெற்றுவரும் நிலையில், அங்கு மழையும் பெய்துவருகிறது. இதனால் சில பகுதிகளில் மீட்புப் பணிகள் மந்த கதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அத்தோடு அங்கு பனிப்பொழிவும் ஏற்பட்டுள்ளதால் கடும் குளிரால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

### துருக்கியை உலுக்கிய நிலநடுக்கங்கள்

உலகின் சக்திவாய்ந்த நிலநடுக்க மண்டலங்களில் துருக்கியும் ஒன்று. கடந்த 1999ஆம் ஆண்டு துருக்கியின் டுஸ்ஸே நகரில் ஏற்பட்ட 7.4 ரிச்டர் நிலநடுக்கத்தில் சுமார் 17 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். துருக்கி வரலாற்றில் தற்போதுவரை அதுதான் மோசமான நிலநடுக்கமாக அறியப்படுகிறது.













Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7